15

குண்டூசி

ஜூன் .... 8 அணா



3745
3.50.
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1950
MADRAS

விநியோகஸ்தர்கள்

பங்களூர் & மைசூர் ஸ்டேட் : K. சுப்பையா ஷெட்டி, ஜுவெல்லர் செளக், பெங்களூர் சிடி.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி : ராமநாதன் பிக்சர்ஸ், காரைகுடி.

கொலம்பியா ரிகார்டுகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1950
MADRAS

328

ஜூபிடரின்

விஜயகுமாரி

டாக்கிப்பாட்டுகள்

T. V. ரத்னம் & P. லீலா

GE·6720 { கொண்டாடும் சுபதினமே
P. லீலா & K. V. ஜானகி
பன்றி மலை

M. L. வஸந்தகுமாரி & P. லீலா

GE·6721 { கீதானந்தம்
— 2 பாகங்கள்

T. R. ராஜகுமாரி

GE·6722 { பொழுது விடிஞ்சா
துன்பமீது துன்பம்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதறாஸ். 2.

ஒரு இளைஞன் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்ட விநோதம்!

ஒரு உண்மையான வாக்குமூலம்.

134125

பிரிய வாசகர்களே!

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர் நடத்தை காரணமாக கெட்டலைந்தவன். நான் அத்துமீறி சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு, வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன்.

நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று. தொடர்ந்து மயக்கம் வர ஆரம்பித்தது. மரண வேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம சொல்வேன். "குணப்படுத்தி விடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்று விடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரக வேதனைப் படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. ஒரு மஹாத்மாவை (பக்கிர்) சந்தித்தேன். என்னைக் கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி, நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்த மாதிரி இருக்கிறேன் என்பது தான். அவரிடம் எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும சொல்லி விட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம் பிறந்தது. உள்ளுக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும், மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இன்று என் மீறிய வீரிய சக்தியைக்கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சில வேளை மருந்து சாப்பிட்டவுடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை. எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுதிட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்குவந்தன. நான் ஊர் திரும்பியதும், மீதமிருந்த மருந்தை கை விடப்பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன்.

முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொது ஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம் செய்கிறேன்.

காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு ரூ. 2—8—0
பூசுவதற்கு எண்ணை ரூ. 2—8—0

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணை பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது.

கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ, அல்லது என் சுயநலனுக்காகவோ, நான் விளம்பரம் செய்யவில்லை. பொது ஜனங்களின் நலன் ஒன்றுதான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும். இந்த மருந்தால் குணமில்லை என்று கண்டால் முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன். குணமாகவில்லை என்று சத்தியம் செய்தால் போதும்.

Prof. B. S. Sidhu, Halka No. 6, (G. M.) Jullundur City. Pb.

ஸ்தாபிதம் 1920

தந்தி : நஸ்யம்
மதருஸ்

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF
TRADE MARK

உலகமெங்கும்
புகழ் பெற்றது.
பல எக்ஸிபிஷன்
களில் மெடல்கள்
பரிசு பெற்றது.

நெ. 1 எக்ஸ்ட்ரு
ஸ்பெஷல்
பட்டணம் பொடி
ஒரு தோலா டின்க
ளிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

AEROPLANE BRAND

STEEL TRUNK WORKS. BRANCH: No., 2, BAKER ST. MADRAS-1.
52, SENGALNEER PILLIAR KOIL ST, MADRAS-1.
PHONE NO, 3619 P.B. NO, 1854.

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளி
களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னாடிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்

இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

மற்றும் ட்விட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீராசாகிப்

.... அண்ட் பிரதர்ஸ் ....

38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19, கிடங்கு தெரு, சென்னை.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதும். இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசியபோட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்த்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

★

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G.M.)

JULLUNDUR CITY.

வசீகர ஸெண்ட்

நவயுகத்தின்
நிகரற்ற அதிசயம்

எங்கள் 'வசீகர ஸெண்ட்,' காதலில் ஏமாற்றமுற்று வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு மதிப்பில்லா மாணிக்கமாகும். எந்த ஆணை அல்லது பெண்ணை வசப்படுத்த விரும்புகிறீர்களோ அவர் அருகில் இந்த ஸெண்டை சில துளிகள் தெளியுங்கள். உடனே அவர் உங்கள் வசப்பட்டுவிடுவார். பிறகு உங்களைப் பிரிய அவருக்கு மனமே வராது. நூற்றுக் கணக்கானவர்கள் இதைப் பரீக்ஷித்திருக்கிறார்கள். தினசரி ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன. கிரக பீடைகள், நோய், இவைகளிலிருந்து காப்பாற்றி ஐசுவரியத்தை அளிக்கும். வழக்குகளிலும், பரீக்ஷைகளிலும் வெற்றி, உத்தியோக உயர்வு எல்லாம் ஏற்படும். உங்கள் நோக்கம் எதுவானாலும் பலிக்கும். ஒரு தடவை பரீக்ஷியுங்கள். நூற்றுக்கு நூறு வெற்றி ஏற்படும். பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்துவிடுவோம். விலை ரூ. 1—15—0; தபால் செலவு தனி. வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங் பி. பி. ஓ.

இரண்டு புட்டிகள் ரூ. 3—4—0; வெளி நாடுகளுக்கு 8 ஷில்லிங் பி. பி. ஓ.

★

Professor
B. S. DHAMI
(Mesmerist)
(G. M.) Jullundur City, (Pb.).

குண்டூசி

ஜூன் 1950

இந்த ஊசியில்

படத் தொழிலுக்கு பண வசதி — தலையங்கம்	7
பிரிட்டிஷ் படத் தொழிலுக்கு சர்க்கார் உதவி	8
காமெடியன் நாராயண ராவ் — வாழ்க்கை வர்ணனை ...	10
மாதுரி தேவி — வர்ணப் படம்	18
இயற்கை நடிப்பு (சிறுகதை) — இல. அரிராமன்	19
நுனிப்புல் — "வெட்டுக்கிளி"	23
குண்டூசியைக் கேளுங்கள் ...	27
செய்திப் படங்கள்	31
பொதுஜனம் பேசுகிறார்	41
பிராயச்சித்தம் (சிறுகதை) — கு. ப. சேது அம்மாள் ...	46
வி. சுசிலா — வர்ணப் படம்	51
நடனம் ஆடினார் — "நந்தி"	53
பிரம்மலோகம்	56
இது செய்தி	58
விக்டர் வீட்டுக் கல்யாணம் ...	61

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் .... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

போட்டி நெ. 5. கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் நெ. 342.

பரிசு ரூ. 30,000 உத்திரவாதம்

எங்கள் சீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை
எண்ணுக்கு எண் முற்றிலும் சரியான விடைக்கு ... ரூ. 500.
முதல் இரண்டு வரிசைகள் சரியானதற்கு ... ரூ. 50.
முதல் வரிசை சரியானதற்கு ... ... ரூ. 20.
முதல் வரிசையில் முதல் எண் சரியானதற்கு ... ரூ. 3.

கூப்பன்களை தபாலில் சேர்க்க வேண்டிய

கடைசி தேதி 11—7—50 விடை தேதி 19—7—50

46



இந்த சதுரத்தில் 4 முதல் 19 வரையிலுள்ள எண்களை வலமாகவும், மேலிருந்து கீழாகவும், இடமாகவும், குறுக்காகவும் எப்படி கூட்டினாலும் கூட்டுத்தொகை 46 வரும்படி அமைக்க வேண்டும்.

பிரவேசக்கட்டணம் :

1 கூபனுக்கு ரூ. 1. பிரதி 6 கூபன்களுக்கு ரூ. 5.

கட்டணத்தொகையை மணியார்டர் அல்லது க்ராஸ் செய்யப்படாத இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்ப வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். இந்த போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானதும், கட்டுப் படுத்துவதுமாகும். எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப் படமாட்டாது. மணியார்டர் ரசீதுகளை கூப்பனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். போட்டியின் சீலிட்ட விடை 16-7-50ந் தேதி எங்கள் காரியாலயத்தில் திறக்கப்படும். உள்ளூர் போட்டி நேயர்கள் நேரில் ஆஜராகலாம். 11-7-50ந் தேதியன்று பிரவேசக் கட்டணத்துடன் கூப்பனை தபாலில் போடலாம்.

KISHORE PUZZLES, No. 5 (G), 1/27, R. H. Road, Madras-14.

பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்து கொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக யிருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாக யிருந்தாலும் வெற்றி பெறுவர். இது உங்களை எல்லாவித ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்க்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்படுவார். நீங்கள் காதல், உத்தியோகத்தில் வெற்றி பெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல் இரவே காணுங்கள். விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ 3—0—0 மிக சக்திவாய்ந்தது. ரூ. 3—15—0. போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal :

SHINING MESMERISM HOUSE (G. M.)
KARTARPUR (E. P.)

குண்டூசி

பட்டை - 3 ஊசி - 9 ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால் ஜூன் 1950

நிகரற்ற விநியோகமுள்ள சினிமா மாத வெளியீடு

படத் தொழிலுக்கு பண வசதி

இந்திய சினிமாத் தொழில்—அதிலும் தமிழ் சினிமாத் தொழில் மிக ஆட்டங்கண்ட நிலைமையை அடைந்திருக்கிறது என்று பிப்ரவரி மாத குண்டூசியில் எழுதியிருந்தோம். ஒரு பக்கம் தயாரிப்புச் செலவுகள் ஏராளமாக உயர்ந்து விட்டன. பண வசூலோ சில படங்களுக்கு மட்டுமே ஏற்படுகிறது. லக்ஷக்கணக்கில் பணச் செலவு செய்து, நக்ஷத்திரங்களைக் கொண்டு தயாரித்த படங்கள் சில படுதோல்வி யுற்றிருக்கின்றன. இதனால் படங்களைத் தயாரிப்பவர்கள் படங்களை முடிப்பதிலோ புதிய படங்களை ஆரம்பிப்பதிலோ, உத்ஸாக மற்று இருக்கின்றனர். இந்த அபாய நிலை உடனே நீக்கப்பட்டே ஆக வேண்டும்.

இந்தத் தொழிலுச்கு முக்கியமாக உள்ள குறை பண உத்வி செய்வதற்கான ஸ்தாபனங்கள் இல்லாததுதான். சில பாங்குகள் சில படமுதலாளிகளுக்கு கடன் கொடுத்து நஷ்டம் அடைந்துள்ளன. அதனால் மற்ற பாங்குகள் படத்தொழில் சம்பந்தப்பட்டவர்களை பக்கத்தில்கூட வர விடுவதில்லை.

தனிப்பட்ட தனவந்தர்கள் இத்தொழிலில் பணம் போடுவதற்கோ, படத் தயாரிப்பில் ஈடுபடுவதற்கோ, படங்களை வாங்குவதற்கோ நடுங்குகிறார்கள். புதிதாக படத் தொழிலில் இறங்குவோரை மோசக்காரர்களும், விரும்பத் தகாதவர்களும் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். வந்தவரை எப்படியாவது அவர்கள் மயக்கிவிடுகின்றனர். பின்னர் ஒரு படத்தைத் தயாரிக்க அவர் கொண்டுவந்த பணத்தில் கால்பாக படமே தயாராகிறது. வந்தவருக்கோ அப்பொழுதுதான் புத்தி வருகிறது. ஆனால் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரத்தைப்பற்றி எண்ணி என்ன பயன்?

படத்தை வாங்குபவர்களையும் இதேபோல மோசக்காரர்கள் சூழ்ந்து கொண்டு, வாய்ச் சாலக்காய் பேசி, ஓட்டைப் படங்களை விற்றுவிடுகின்றனர். இந்த அனுபவத்திற்குப் பிறகு அவர் ஏன் மறுபடியும் படம் வாங்க வரப்போகிறார்? அநேக தமிழ்ப் படங்கள் அரைகுறையாய் நிற்பதற்கும், முடிந்த படங்களை வாங்க ஆளில்லாததற்கும் இதுதான் காரணம். நாம் தொடர்ந்து படத் தொழிலில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பட முதலாளிகள் படத்தைத் தயாரிக்க வேண்டும்; விற்க வேண்டும். அதோடு லாட்டரி வியாபாரமாக இல்லாமல், போடும் பணம் நிச்சயம் திரும்பி வரும் என்ற நம்பிக்கை ஏற்படும்படிச் செய்ய வேண்டும். எப்படியாவது, யாரையாவது பிடித்து நஷ்டத்தை தமக்குப் பதில் அவர் சுமக்கும்படிச் செய்யும் மோசக் கருத்து இருக்கும் வரையில் நம் படத் தொழில் ஒருக்காலும் உருப்படாது. தனவந்தர்களும், பாங்குகளும் இத்தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பண உதவி செய்ய முன்வரவும் மாட்டார்கள். இத் தொழிலில் தற்போ

துள்ளவர்கள் கூடி இந்த அவநம்பிக்கையைப் போக்க முற்படவேண்டும்.

இன்றைய சினிமா நிலைமையை விசாரித்து இந்திய சர்க்காருக்குத் தெரிவிப்பதற்காக விசாரணைக் கமிட்டி வேலை செய்து வருகிறது. அவர்கள் படத் தொழிலுக்குப் பண உதவி செய்வதற்கான ஏற்பாட்டை முதன்மையாக கவனிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் படத்தொழில் இந்தியப் படத்தொழிலைவிட மோசமாக இருந்தது. ஆனால் சர்க்கார் அதற்குத் தகுந்த பாதுகாப்பு அளித்திருப்பதோடு, பண உதவியும் செய்ய முற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக பிரிட்டிஷ் படத்தொழில் இப்பொழுது வேகமாக முன்னேறி வருவது கவனிக்கத்தக்கது. அந்த விவரங்களைக் கீழே வெளியிட்டிருக்கிறோம். நம் இந்திய சர்க்காரும் இதுபோல படத் தொழிலுக்குப் பண உதவி செய்ய முன் வந்தால், நம் படத் தொழிலில் தற்போது காணப்படும் மந்தம் நீங்கி, வேகமாக முன்னேறும். இந்திய சர்க்கார் உண்மையில் தேசீய நோக்கம் கொண்டதாயிருப்பின் கட்டாயம் இத்தொழிலுக்கு உதவி செய்து, அதைக் காப்பாற்ற வேண்டும்.

பிரிட்டிஷ் படத் தொழிலுக்கு சர்க்கார் உதவி

பதினெட்டு மாதங்களுக்குமுன் பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ் படத் தொழிலுக்குப் பணஉதவி அளித்து அதை கைதூக்கிவிடத் தீர்மானித்தது. அதற்கிணங்க சர்க்கார், "தேசிய சினிமா பண உதவி கார்பொரேஷனை" 1949ம் வருஷம் ஆரம்பத்தில் ஸ்தாபித்தது. அதன்மூலம் சர்க்காரின் கஜானாவிலிருந்து படத் தொழிலுக்கு 5,000,000 பவுன்கள் வரை கிடைத்துள்ளது.

இந்தக் கார்பொரேஷன் எந்த முறையில் பண உதவி செய்கிறதென்று பார்ப்போம். ஒரு படத்தைத் தயாரிக்க முற்படும் பட முதலாளி, தம் படத்தை விநியோகிப்பதற்கு முதன் முதலில் விநியோகஸ்தருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். இந்த ஏற்பாடு முடிந்துவிட்டால், அங்குள்ள பாங்குகள் படத்தின்மீது 75 சத விகிதம் கடன் கொடுக்கின்றன. பாக்கி 25 சத விகிதத்தில் பட முதலாளியின் ஒரு பங்கு போக மீதத்தை இந்த கார்பொரேஷன் கொடுக்கிறது. பட முதலாளி தம் பணத்தை முதலில் செலவழித்து, கடைசியில் திரும்பப் பெறவேண்டும்.

தனிப்பட்ட பட முதலாளிகளுக்கு கார்பொரேஷன் மற்றவர்களின் உத்திரவாதத்தின்பேரில் பண உதவி செய்கிறது. ஒரு படத்தின் செலவு, போட்ட திட்டத்திற்கு மேல் ஓடிப் போவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த சந்தர்ப்பங்களில் உத்திரவாதம் அளித்தவர் படத்தை முடிப்பதற்குத் தேவையான அதிகப் பணத்தைக் கொடுத்தாக வேண்டும்.

பண உதவி செய்ய முற்படுமுன், கதை, வசனம், நக்ஷத்திரங்கள், டைரெக்டர் முதலிய எல்லா அம்சங்களையும் நுட்பமாய் ஆராய்கிறது. பணம் வசூலாகும் என்ற நம்பிக்கையை அளிக்கும் படங்களுக்கு மட்டுமே கார்பொரேஷன் உதவியளிக்கிறது. அவர்களது பரிசீலனை மிக வெற்றிகரமான பலனையே அளித்திருக்கிறது. கார்பொரேஷனிடம் பண உதவி பெற்ற படங்கள் எல்லாமே நன்றாக ஓடி, நிறைய லாபத்தைத் தந்துள்ளன. ஏராளமான லாபம் ஏற்படுவதே போல் ஏராளமான நஷ்டமும் ஏற்படக்கூடும் என்பதை கார்பொரேஷன் உணர்ந்திருக்கிறது. எனவே நஷ்டத்தைச் சமாளித்துக் கொள்ளுவதற்காக லாபத் தொகையிலிருந்து பெருந் தொகையை அது ஒதுக்கி வைத்திருக்கிறது.

மகத்தானதொரு உணர்ச்சியூட்டும் சித்திரம்

உரிமைக்காகப் போராடிய ஒரு மனிதையின் கதை

ராஜ்கமல் கலாமந்திரின்

தாஹெஜ்

(ஹிந்தி)

● ஜயஸ்ரீ ● பிருத்விராஜ்
● கரன் திவான் ● லலிதாபவர்
● உல்ஹாஸ் நடித்தது.

பம்பாயில் இப்போது பிரமிக்கத்
தக்க வெற்றி அடைந்துள்ளது.

தயாரிப்பு & டைரெக்ஷன் : **வி. சாந்தாராம்**

வெகு விரைவில் கீழ்க்கண்ட இடங்களில் திரையிடப்படும் :

பிரபாத் — மதராஸ் & பெங்களூர்
தீபக் மஹால் — ஹைதராபாத்

மற்றும் இதர முக்கிய ஸ்தலங்களில்

விநியோகஸ்தர்கள் :

அலங்கார் சித்ரா லிமிடெட்,
பங்களூர் - 2.

தந்தி : ALANKAR

It's Rajkamal



காமெடியன் நாராயணராவ்

ஹெமலின் என்பது ஓர் ஐரோப்பிய நகரம். அந்த நகரம் ஒரு சமயம் எலிகளின் அட்டூழியம் சகிக்க முடியாதபடி ஆகிவிட்டதாம். எலிப் பட்டாளத்தைக் கண்டு ஆண்களே நடுங்கினர் என்றால் பெண்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன? எலி உபத்திரவத்தைத் தீர்ப்பவர்களுக்கு ஏராளமான தொகையைப் பரிசளிப்பதாக அந்த ஊர் மேயர் பிரகடனம் செய்தார். கடைசியில் ஒரு வாத்தியக்காரன் மேயரிடம் வந்து, எலி உபத்திரவத்தை தான் அடியோடு தீர்த்துவிடுவதாகக் கூறினான். அதே போல அவன் ஒரு குழலை ஊத ஆரம்பித்ததும், வளைகளிலிருந்த எலிகளெல்லாம் அக்குழலோசையைக் கேட்க ஓடி வந்தன. குழலை ஊதியபடியே வாத்தியக்காரன் நதியை அடைந்து, தண்ணீரில் இறங்கி, நடு ஆற்றிற்குச் சென்றான். அவனோடு கூடவே எல்லா எலிகளும் தண்ணீரில் குதித்தன. அன்று முதல் ஹெமலின் நகரம் எலிகளின் ஆட்சியிலிருந்து விடுபட்டது.

ஆனால் ஹெமலின் மேயர் முதலில் வாக்களித்தபடி வாத்தியக்காரனுக்கு பரிசுத் தொகையைக் கொடுக்க மறுத்தார். கோபம் அடைந்த வாத்தியக்காரன் வேறொரு குழலை எடுத்து ஊதினான். அந்த நகரிலிருந்த அத்தனை குழந்தைகளும் குழலோசையைக் கேட்க ஓடிவந்தன. குழலை ஊதியபடியே வாத்தியக்காரன் மலைப் பிரதேசத்தை அடைந்து மறைந்தான். குழந்தைகளும் அவன் கூடவே சென்று விட்டன.

'நான் அந்தக் காலத்திலே, பள்ளிக்கூடத்திலே படித்து வந்தபோது' இந்தக் கதையை வாசித்தது, '' நல்ல கட்டுக்கதை இது! குழல் ஊதுவதாவது; குழந்தைகள் கூடச் செல்வதாவது!'' என்று நினைத்தேன். ஆனால். நாராயண ராவின் வாழ்க்கை வரலாறுகளைத் தெரிந்து கொண்ட பின்னரோ, ''குழலோசைக்கு எலிகளை மட்டுமல்ல; பாம்புகளை மட்டுமல்ல; குழந்தைகளைக்கூட கவர்ந்திழுத்து, அவர்கள் சுய உணர்வை இழக்கும்படிச் செய்யும் அற்புத சக்தி உண்டு'' என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன்.

நீங்களே சொல்லுங்கள்; பாம்புகளை ஆட்டுவதற்காக பாம்பாட்டி மகுடி ஊதுகிறான். வகுப்பில் பாடங் கேட்டுக் கொண்டிருக்கும் நாராயண ராவை அந்த நாதம் மிகவும் வசீகரிக்கா விட்டால் அவர் எதற்காக உபாத்யாயருக்குத் தெரியாமல் பள்ளியிலிருந்து நழுவி பாம்பாட்டியைத் தேடிக் கொண்டு போகப்போகிறார்? அந்த மகுடியின் மகிமையே மகிமை! நாராயண ராவ் சினிமா நடிகர் ஆவதற்கு முதல் தூண்டுகோலாக இருந்ததல்லவா அது! நாராயண ராவின் கவனத்தைப் படிப்பில் திருப்புவதற்கு [illegible] ரது பெற்றோர்கள் சாம, [illegible]



தாடியுடன் உள்ளவர் சுப்பய்யா பாகவதர்

கட்டை வைத்துள்ளவர் யோக மங்களம்

பேத, தண்டப் பிரயோகங்களைச் செய்ததெல்லாம் பலனளிக்கவேயில்லை. ‘நல்ல வேளையாக அவரே ஒரு பாப்பாட்டியாக ஆகிவிடாமலிருந்ததே போஸ்’ என்று பெற்றோர் தங்கள் முயற்சிகளைக் கைவிட்டனர்! நாராயண ராவ் நான்காவது வகுப்பிலிருந்து வெளியேறினர்.

பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபோதே பக்கத்து ஊர்களில் எங்காவது நாடகம் நடந்தால் நாராயண ராவ் நழுவி விடுவார். அப்படியிருக்க பள்ளியை விட்ட பின்னர் கேட்கவா வேண்டும்? அந்தப் பக்கத்து ஊர்களில் நடந்த நாடகங்களுக்கெல்லாம் நாராயண ராவ் “மாமூல் பனிதர்” ஆகிவிட்டார்! இதை அறிந்த பெற்றோர்கள், ‘என்ன நடந்து விடக் கூடாது’ என்று பயந்து பிரமாதமாக முட்டுக் கட்டை போட முற்பட்டார்களோ அதுவே நடந்து விட்டது. நாராயண ராவ் பெற்றோர்களுக்குத் தெரியாமல் சென்று, (தம் பன்னிரண்டாவது வயதில்) கரூரில் நாடகங்களை நடத்தி வந்த பெரிய சாமா ஐயரின் கம்பெனியில் ஒரு நடிகராய்ச் சேர்ந்துவிட்டார்.

பெரிய சாமா ஐயர் கம்பெனி அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாய் விளங்கி வந்தது. எஸ். எஸ். அனந்த நாராயண ஐயர், பெரிய மஹாதேவய்யர், சின்ன மஹாதேவய்யர், ராஜபார்ட் ஜகன்னாத நாயுடு, ஜி. எஸ். முனுசாமி நாயுடு, நடேச பத்தர், (குழந்தை) எஸ். ஜி. கிட்டப்பா போன்ற பெரிய பெரிய நடிகர்களெல்லாம் நடித்து வந்தனர். இருந்த போதிலும் புதிதாய் சேர்ந்த



நாராயண ராவுக்கும் இக் கம்பெனியில் நல்ல வேஷங்கள் கொடுக்கப்பட்டதாம். பாலபார்ட், ராஜ பார்ட், பிள்ளையார், மோஹினி, சரஸ்வதி ஆகிய வேஷங்களில் அவர் நடிப்பது வழக்கமாம்.

பெரிய சாமா ஐயர் கம்பெனியில் நாராயண ராவ் கொஞ்ச காலம் நடித்து வந்த பின், அதினின்றும் விலகி வீராகவலு நாயுடுவின் கம்பெனியில் சேர்ந்தார். சில மாதங்களுக்குப் பிறகு, சின்னசாமா ஐயர் புதிதாய் ஆரம்பித்த நாடகக் கம்பெனியில் சேர்ந்தார் நாராயண ராவ். இந்தக் கம்பெனியிலும் அவர் அதிக காலம் இருக்கவில்லை. அதிலிருந்து விலகிய பின் அவர் பற்பல நாடகக் கம்பெனிகளில் சிற்சில காலமாக நடித்து வந்தார். இப்படியாக ஆறு வருஷங்கள் கழிந்தன. நாராயண ராவுக்கே நாடகக் கம்பெனிகள் மீது சலிப்பேற்படத் தொடங்கியது.

இந்த சமயத்தில் அவரது தந்தையார் காலமானார். அதன் விளைவாக அவர் நாடகத் தொழிலை விட்டு விலகி, தம் தகப்பனார் விட்டுப் போயிருந்த நில புலன்களைக் கவனிக்க வேண்டியதாயிற்று.

ஊர் திரும்பிய நாராயணராவ் உள்ளூரிலேயே ஒரு உத்தியோகத்தைத் தேடிக் கொண்டு தங்கிவிடத் தீர்மானித்தார். அதற்கேற்றாற்போல அவருக்கு அந்த ஊர் பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் வேலை கிடைத்தது. அந்தவேலையோ அவருக்குப் பிடிக்கவில்லை. பிறகு அவர் அந்த ஊர் போர்டு ஆரம்ப பாடசாலையில் ஒரு உபாத்தியாயரானார். இந்த வேலை அவருக்குப் பிடித்த மாதிரி தோன்றியது. சில மாதங்களுக்கெல்லாம் அவர் ‘டிரெயினிங்’ பெற விரும்பினர். பள்ளிக்கூட அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டரை (தடபுடலாக கோட்டு ஷர்ட்டெல்லாம் இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டு!) போய் பார்த்து அநுமதியும் பெற்றார் டிரெயினிங் பெறுவதற்காக சேலத்திற்குச் சென்றார் நாராயண ராவ். ஆனால் அவருக்கு இத்தொழில் பிடிக்காமற்போகவே ஒரு மாதத்திற்கெல்லாம் ஊர் திரும்பி விட்டார்.

இத்துடன் அவரது உத்தியோக வேட்டை தீர்ந்து விட்டதாக நீங்கள் நினைக்கக் கூடாது. எப்படியோ அந்த ஊர் கர்ணம் வேலையை அவர் பெற்று விட்டார். இந்த வேலையையாவது எப்படியேனும் விடாப்பிடியாய் பார்க்க வேண்டும் என்று தீவிரமாய் பயற்சித்தார். ஆனால் மீண்டும் அவருக்கேற்பட்ட ‘நாடகப் பைத்தியம்’ அவரை இந்த வேலையில் இரண்டு வருஷ காலத்திற்கு மேல் விட்டுவைக்கவில்லை. தமக்குகந்த தொழில் நாடகமே என்று தீர்மானித்துக் கொண்டு அவர் ரெபல வேலு நாயரின் கம்பெனியில் சேர்ந்தார். இந்தக் கம்பெனியில்தான் அவர் சேர்ந்தார்ப்போல பல வருஷங்கள் நடித்து வந்தது. இக்கம்பெனி கலைக்கப்படவே அவர் வேலு நாயர், சுப்பய்யா பாகவதர் முதலியவர்களுடன் ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து வரலானார். இலங்கை, பர்மா முதலான நாடுகளுக்கு அவர் பன்முறை சென்று நாடகங்களில் நடித்து விட்டு வந்திருக்கிறார்.

தற்போது வாதாச்சாரியார் சட்டை போடாத எம். எல். ஏ. வாக விளங்குவது போல, அந்தக் கால நாடக உலகில் நாராயண ராவ் சட்டை போடாத நடிகராய் விளங்கி வந்தார். ஆனால் இதை யாரும் ‘சட்டை’ பண்ணவில்லை என்று சொல்வதற்கில்லை. அவர் டி. பி. ராஜலக்ஷ்மியுடன் ரங்கூனுக்கு நாடகம் ஆடப் போயிருந்த போது நிகழ்ந்த ஒரு ரஸமான சம்பவத்தைக் கேளுங்கள்:

நாராயண ராவின் நடிப்பை ரங்கூன் வாசிகள் மிக ரஸித்து வந்

தனர். அதன் அறிகுறியாகவும், அவரைச் சட்டை போடச் செய்யவேண்டுமென்ற ஆவலினாலும், ஒரு கனவான் அவருக்கு ஒரு 'சர்ஜ்' கோட்டை மேடை மீது பரிசாக அளித்து, அதை அணிந்து கொண்டு காட்சி அளிக்கும்படி வேண்டினார். நாராயணராவ் அந்தக் கோட்டை வாங்கி இரண்டு மூன்று தடவை திருப்பிப் பார்த்து, அதன் மினுமினுப்பைக் கண்டு சொக்கிப் போனார். பிறகு, "அடடா! இது ஒப்பன் கோட்டுன்னு! எங்கிட்ட ஷர்ட்டே கிடையாதே!" என்று கையை விரித்து, உதட்டைப் பிதுக்கியபடி கூறினார். மறுநாள் பார்க்கவேண்டுமே; அவரது அபிமானிகள் பத்துப் பனிரண்டு ஷர்ட்டுகளை அவருக்குப் பரிசாய் அளித்தனராம்! முதன் முதலாக நாராயணராவ் கோட்டையும், ஷர்ட்டையும் அணிந்து கொண்டு வந்ததை ரங்கூன் ரஸிகர்கள் பெரிய தமாஷாகப் பாவித்து, கூரை பிளக்கும்படி கரகோஷமும் செய்தனராம்.

மேடையேறிய ஆரம்ப காலத்தில் நாராயண ராவ் பற்பல வேஷங்களை ஏற்று நடித்து வந்தாரென்றாலும், காலக்கிரமத்தில் அவரது ஹாஸ்ய நடிப்பையே ஜனங்கள் அதிகமாக ரஸிக்கத் தொடங்கியதால், அவர் பபூன் வேஷத்தையே தமக்கு ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டார்.

இப்படியிருக்கையில், 1934-ம் வருஷத்தில் கோவை வெரைட்டி ஹால் டாக்கீஸார் "சகுந்தலா" படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்தனர். அப்பொழுது துஷ்யந்தன் வேஷத்தில் வேலு நாயரும், மாடவ்யன் வேஷத்தில் நாராயண ராவும் நல்ல புகழுடன் விளங்கி வந்தனர். எனவே அவ்விருவரையும் மேற்படிக் கம்பெனியார் "சகுந்தலா" படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

"சகுந்தலா" படம் முடிந்தபின் நாராயண ராவ் பலபலவென்று படங்களில் தோன்றலானார். 'அல்லி அர்ஜுனா", (கே. பி. சுந்தராம்பாள் நடித்த) "நந்தனார்", "ரத்னாவளி", "பஹா பாரதப்", "சத்திய சீலன்", 'கவிரத்ன காளிதாஸ்" ஆகிய அநேக படங்களில் அவர் ஹாஸ்ய பாகங்களை ஏற்று நடித்தார். இப் படங்களிலெல்லாம் அவரது நடிப்பு சாதாரணமாகவே தான் அமைந்தது. இதன் பிறகுதான் அவருக்கு புகழிலும், நடிப்பிலும் திடீரென்று உன்னத ஸ்தானம் பெறச் சந்தர்ப்பம் வாய்த்தது.

டைரெக்டர் ஒய். வி. ராவ் ஒரு சிறந்த நடிகரல்லவா? அவர் தாம் டைரெக்ட செய்ய முற்பட்ட "சிந்தாமணி" படத்தில் ஆழ்வார் செட்டியின் வேஷத்தை நடிப்பதற்கு நாராயண ராவே "தகுந்தவர்" என்று தேர்ந்தெடுத்தார். "தகுந்தவர் மட்டுமா? அதற்காகவே பிறந்தவர், அவர்!" என்று ரஸிகர்கள் வானளாவப் புகழும் வண்ணம் அப் பாகத்தை நடித்து முடித்தார் நாராயண ராவ்.

அவர் மீது கொண்ட அபிமானம் காரணமாக, ஜனங்கள் அவரைப் பார்க்கும் போதெல்லாம், "நாராயண ராவ்" என்பதற்கு பதில் "ஆழ்வார் செட்டி" என்றே குறிப்பிட்டு வந்தனர். தமிழ்ப் படவுலகில் முதன் முதலாக பிரமாதமான புகழைப் பெற்ற ஹாஸ்ய நடிகர் நாராயண ராவ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

"சிந்தாமணி" படம் அதிசயிக்கத்தக்க ஆதரவைப் பெற்றதால், அதில் நடித்த முக்கிய நடிகர்களுடன் நாராயண ராவும் பல ஊர்களில் நேரில் காட்சி அளிக்க வேண்டியதாயிற்று. நாராயண ராவ் எங்கு தோன்றினாலும் ஒரே தமாஷ்தான். ஒரு தடவை மதுரை 'ஸிடி' சினிமாவில் அவர் மேடை மீது தோன்றியபோது நிகழ்ந்த 'தமாஷ்' எல்லாவற்றிற்கும் சிகரம் போன்றது.

"சிந்தாமணி" படத்தின் சொந்தக்காரர்கள் அவருக்கு ஒரு தங்க மாலையைப் பரிசாக வழங்கினர். அதைத் தொடர்ந்து அநேக ரஸிகர்கள் அவருக்குப் பூமாலைகளைச் சூட்டினர். ஆழ்வார் செட்டியின் பரம ரஸிகர்கள் ஒருவன் அவர் கழுத்தில் ஒரு விநோதமான மாலையைப் போட்டான். கடலைச் சுண்டலை துணியிப்டுக் கோர்த்திருந்த அந்த மாலை அவரது கழுத்தில் போடப்பட்டதும் தியேட்டர் ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. இதனிடையில், சுண்டல் மாலையைப் பார்த்ததும் ஒரு ரஸிகனுக்கு நாக்கில் ஜலம் ஊறியது போலும்! அவன் மெதுவாக "ஆழ்வார் செட்டி"யை அணுகி, அவரது கழுத்திலிருந்த சுண்டல் மாலையை உருவிக் கொண்டு போய்விட்டான்! தங்க மாலையை மட்டும் 'செட்டியார்' கெட்டியாகப் பிடித்துக் கொண்டதால் அது மட்டும் தப்பியது. சிந்தாமணியிடம் செல்வத்தையெல்லாம் தொலைத்தபின் 'ஞானோதயம்' பெற்றவராயிற்றே, அவருக்கா தெரியாது தங்க நகையின் அருமை?

"சிந்தாமணி"யில் நடித்தபின், "கைலாஸ பிராமணன்", "பக்தமீரா", "ஸ்வர்ணலதா", "வசவள மஹாராஜு", "கம்பர்", "அனாதைப் பெண்", "மணிமேகலை", "சதிமுரளி", "பரசுராமர்" ஆகிய ஒன்பது படங்களில் நாராயண ராவ் நடித்தார். "சிந்தாமணி"யில் அவரது ஹாஸ்ய நடிப்பு உச்சஸ்தானத்தை எட்டிவிட்டதால், மேற்சொன்ன படங்களில் அவரது நடிப்பு சுமாராகவே காணப்பட்டது. ஆனால், அவர் பேரில் பொது ஜனங்கள் கொண்டிருந்த அபிமானம் மட்டும் நாளுக்குநாள் அதிகரித்தே வந்தது.

கலைஞனை கலைஞன் கௌரவிப்பது ஒரு அசாதாரண விஷயமல்லவா? அந்த அசாதாரண விஷயத்தைச் செய்து காட்டினார் என். எஸ். கிருஷ்ணன். தாம் தயாரித்து வந்த "நவீன விக்ரமாதித்தன்", "சந்திரஹரி" ஆகிய இரு படங்களிலும் அவர் நாராயண ராவுக்கு நல்ல வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். இப்படங்

களின் மூலம் மீண்டும் நாராயண ராவின் நடிப்பு "சிந்தாமணிச் சிறப்பை" எட்டியது. அதன் பிறகு நாராயண ராவ் "பக்த கௌரி", "பஞ்சாமிர்தம்" ஆகிய படங்களில் நடித்தார்.

இதுவரை நடித்த இருபத்தியோரு படங்களிலும் நாராயண ராவ் ஹாஸ்ய பாகங்களையே ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அடுத்தாற்போல், "பக்த நாரதரிலோ" அவருக்கு முதல் தடவையாக ஹாஸ்யக் கலப்பில்லாத ஒரு முக்கிய வேஷம் அளிக்கப்பட்டது. அப்படத்தில் நாராயண ராவின் நடிப்பைப் பார்த்துப் நான் ஒரேயடியாய் ஆச்சரியப் பட்டுப் போனேன். ஹாஸ்ய நடிகரான நாராயண ராவ் குண விசேஷ பாத்திரமொன்றை அவ்வளவு திறமையாக நடிக்கக் கூடும் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லை.

"நாரதர்" படம் முடிந்ததும் நாராயண ராவ் ஜெமினி "நந்தனார்", "மனோன்மணி", "குபேர குசேலா", "ஹரிச்சந்திரா", "தாஸி அபாஞ்சி" ஆகிய படங்களில் நடித்தார். இப் படங்கள் ஒவ்வொன்றிலும் அவரது நடிப்பு படிப்படியாக முன்னேறி, "அபரஞ்சி"யில் மிகப் பாராட்டத் தக்கபடி அமைந்திருந்தது. ஜெமினி ஸ்டுடியோ அதிகாரிகளும் அவரது திறமைகளை குண விசேஷ நடிப்பிலும் பரீக்ஷித்து விட்டுத் தீர்மானித்தனர் போலும். "கண்ணம்மா என் காதலி" படத்தில், "அந்தப் பாத்திரமே இவருக்காக சிருஷ்டிக்கப்பட்டதா; அல்லது, 'அந்தப் பாத்திரத்தில் இவர் அவ்வளவு நுட்பமாய் ஒன்றிப்போனாரா" என்று கண்டு பிடிக்க முடியாதபடி அதிசிறப்பாய் நடித்தார் நாராயண ராவ். அவருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்தது இப்படம். 'நாராயண ராவை ஹாஸ்ய பாகத்தில் நடிக்கச் செய்யாமல் இது போன்ற குண விசேஷ பாத்திரங்களிலேயே நடிக்கச் செய்யலாமே' என்று ரஸிகர்கள் கேட்கும்படியாகி விட்டது.

ஆனால் ரஸிகர்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. நாராயண ராவுக்கு மீண்டும் ஹாஸ்ய பாகங்களே அளிக்கப்பட்டன. "ருக்மாங்கதன்", "மிஸ் மாலினி", "ஞான சௌந்தரி", "சந்திரலேகா" (ஹிந்தி தமிழ்), "சக்ரதாரி", "நவஜீவனம்", "அபூர்வ

[தொடர்ச்சி 57-ம் பக்கத்தில்]



இயற்கை நடிப்பு

இல. அரிராமன்.......

மரங்களடர்ந்த ஒரு பயங்கரமான காடு. அந்தக் காட்டின் நடுவே ஒரு பெண் தலைவிரி கோலமாய், அழுது புலம்பிக் கண்ணீர் வடித்த வண்ணம் நிற்கிறாள்—உண்மையில் அல்ல. இது ஒரு ஸ்டுடியோ காட்சிதான்.

"சுப தீபம்" என்ற படத்திற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய ஒரு காட்சி இது.

காமிரா, அந்தக் காட்சியைத் தன்னுள் அடைத்துக் கொள்ளத் தயாராய் நிற்கிறது. காமிராமேனின் கைகள் விசையைத் தட்டிவிட துடிக்கின்றன. டைரெக்டர் சியாம் சுந்தரின் வாயிலிருந்து "உம்......ஷூட்......," என்ற வார்த்தை வெளிவர வேண்டியதுதான் பாக்கி.

ஆனால் .....ஏனோ தெரியவில்லை, டைரெக்டரின் வாய், அந்த வார்த்தையை வெளியிடவேயில்லை.

காரணம் ..? டைரெக்டர் சியாம் சுந்தருக்கு நடிப்பென்றால் தத்ரூபமாய் இருக்க வேண்டும். வாங்கும் பணத்திற்காக, கடனுக்கு நடித்து விட்டுப் போவதென்பது அவரிடம் நடக்காத காரியம். எத்தனை தடவை 'ரீ-டேக்' ஆனாலும்தான் என்ன? தன் மனதிற்குத் திருப்தி ஏற்படும்வரை விடமாட்டார்.

அந்த செட்டில், தலைவிரி கோலமாய் அழுது புலம்பிக் கொண்டு நிற்கும் நடிகை கமல குமாரியின் நடிப்பு, டைரெக்டர் சியாம் சுந்தரின் மனதிற்கு, அன்று திருப்தியளிக்கவேயில்லை. அதனால் தான் அவரது வாய், அந்த வார்த்தையை வெளித்தள்ள மறுத்துவிட்டது.

கமல குமாரியின் முகத்தில், சோக பாவமே இல்லை. 'அழு' என்று யாரோ சொல்லிக் கொடுத்து அழுவது போலிருந்தது, அவளது நடிப்பு.

"என்ன கமலா! உன்னுடைய நடிப்பிலே கொஞ்சங்கூட உணர்ச்சியே இல்லையே!" என்றார் டைரெக்டர் சியாம் சுந்தர் அலுப்புடன்.

"நானென்ன சார் செய்யட்டும். நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் நடிக்கிறேன்...'லவ்' சீனாயிருந்தால் மலைவருந்து வாங்கியிருப்பேன். சோக நடிப்பு வரமாட்டேங்குதே, சார்," என்றாள், சோகமாய் நடிக்க வேண்டிய அவள் சிரித்துக் கொண்டே.

டைரெக்டர் சியாம் சுந்தருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. டின்னிலிருந்த சிகரெட்தான் காலியாயிற்றே தவிர, அவர் மூளை குழப்பமடைந்தே இருந்தது.

"சரி......சரி......இன்னிக்கி ஷூட்டிங் வேண்டாம்......இதைவிட 'இம்ப்ரூவ்மென்ட்' தெரியுதான்னு நாளைக்குப் பார்ப்போம்" என்றபடியே களைத்திருந்த அவர் நாற்காலியில் சாய்ந்தார்.

* * *

அன்றிரவு.........

டைரெக்டர் சியாம் சுந்தருக்கு தூக்கமே வரவில்லை. எப்படி வரும்...?

கமலகுமாரி நடிக்க வேண்டிய, அந்த சோக கட்டம், படத்தில் ஜீவநாடியான பாகம். படம் பார்ப்பவர்களின் கண்கள் அந்த சோக கட்டத்தில் தம்மையறியாமல் நீர்வரச்செய்யவேண்டும். அவ்வளவு தத்ரூபமாக, உணர்ச்சி ததும்ப, அவளை நடிக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத வரையில், அவர் உணவு, உறக்கம் எதையும் கவனிக்கவே மாட்டார்.

சோக கட்டத்தில் அவளது நடிப்பு பிரகாசிக்கவில்லையே..... என்ன செய்வது? இதே யோசனை அவர் சிந்தனை வட்டத்தில் ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருந்தது.

"டச்—டிக்" என அவர் இருதயத்துடன் போட்டியிட்டுக் கொண்டிருந்த

மாதுரி தேவி

மாடர்ன் தியேட்டர்ஸார் விரைவில் வெளிவிட விருக்கும் "மந்திரி குமாரி" தமிழ்ப் படத்தில் மாதுரி தேவி பிரமாதமாய் நடித்திருக்கிறாராம்.

கடிகாரம், "டான் டான்" என இரு முறை முழக்கியது. அவரைச் சுற்றிலும் தரையில், சுட்டெரித்த—பின்னமாக்கப்பட்ட—சிகரெட் துண்டுகள்......

தூக்கம், அவர் இமைகளை லேசாக அணைக்க ஆரம்பித்தது...படுக்கையில் போய்ச் சாய்ந்தார் அவர்.

• • •

மறுநாள்......

அதே ஸ்டுடியோ—அதே 'செட்'—அதே இடத்தில் கமல குமாரி.

ஒலிப்பதிவாளரிலிருந்து, படப் பிடிப்பாளர் வரை, 'எங்கே நேற்றைய தினத்தைப போல், இன்றும் ஷூட்டிங் நடக்காமல் போய் விடுகிறதோ' என்று திகில் பிடித்த நெஞ்சுடன் நிற்கின்றனர்.

செட்டில் நின்று கொண்டிருக்கும் கமல குமாரி, சோகமாய் நடிக்க முயற்சித்துகொண்டிருந்தாள்.

"உம்......ரெடி! கமலா!......," என்றார் டைரெக்டர் சியாம் சுந்தர்.

கமல குமாரியின் கணகள், நீரைக், கொட்ட ஆரம்பித்தன...அவள் முகததில சோகக கோடுகள படரலாயின.

"எஸ்!..... எஸ்!......இன்னும் கொஞ்சம்...... கொஞ்சம்......", என்று அவளை மேலும் மேலும் ஊக்கிக் கொண்டிருந்தார் அவர்.

அச்சமயம் ஸ்டுடியோவின் காவற்காரன் அங்குவந்து, டைரெகடரை நோக்கி, "சார்" என்றபடியே நின்றான.

"என்னப்பா? என்ன சமாசாரம்...?" என்று கேட்டார் டைரெக்டர் காவற்காரனை நோக்கி.

"தந்தி பியூன் வந்திருக்கான்......யாருக்கோ தந்தி வந்திருக்குதாம்......இங்கே வரணுங்கறுன் சார்...ஷூட்டிங் நடககுதேன்னு, நான் அவனை அங்கேயே நிறுத்திட்டேனுங்க..." என்று இழுத்தான் காவற்காரன்...

"அட! நல்ல ஆளப்பா நீ! யாருக்கோ தந்தி வந்திருக்கு...அவனை உள்ளே விடறத்துககுக் கூட என்னைக் கேக்கணுமா...?" என்றார் டைரெக்டர்...

"தந்தச் சேவகனை மட்டும், என்ன? காசினியைப் படைத்த கடவுளைக்கூட, உத்தரவில்லாமல் அவன் உள்புக விட மாட்டானே!" என்று சொல்லிச் சிரித்தார் வசன கர்த்தா.

திரும்பிச் சென்ற காவற்காரன். சில நிமிஷங்களுக்கெல்லாம் தந்தி சேவகனோடு அங்கே வந்தான்.

"சார்!..... தந்தி!......" என்றான் தந்திச் சேவகன்.

"அது தெரியுதப்பா...தந்தியில்லாமே நீ என் இங்கே வர்ரே......யாருக்குன்னு சொல்லு......" என்றார் டைரெக்டர்.

"கமல குமாரிக்கு......" என்று தந்திச் சேவகன் சொன்னதுதான் தாமதம், "ஹா!" என்று அலறியபடியே 'செட்'டிலிருந்து ஓடிவந்தாள் கமல குமாரி.

கையெழுத்திட்டுத் தந்தியை வாங்கினாள். தந்திச் சேவகன் அங்கிருந்து அகன்றான்.

தந்தியை நடுங்கும் கைகளால் டைரெக்டர் சியாம் சுந்தரிடம் கொடுத்தாள் அவள்.

டைரெக்டர், தந்தியை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்; "மதர்...டைடு...,"



என்று முணுமுணுத்தன அவர் உதடுகள்.

நீரைச்சிந்தச் சித்தமாயிருக்கும் கண்களால் டைரெக்டரை உற்றுப் பார்த்தாள் கமல குமாரி.

''கமலா......உங்க அம்மா இறந்துட்டதாகத் தந்தியிலே கண்டிருக்கு...'' என்றார் டைரெக்டர். துக்கம், அவரது தொண்டையை அடைத்தது.

''ஐயோ! அம்மா!...டைரெக்டர்ஸார்... என்னுடைய அம்மா பக்கத்து கிராமத்திலேதான் இருந்தா...கொஞ்ச நாளாய் உடம்பு சரியில்லாமே இருந்தது...ஸார், ஷூட்டிங்கை ஒத்திவையுங்கோ, ஸார். கடைசியாய் நான் எங்கம்மா முகத்தையாவது பார்க்க வேண்டாமா...ஸார்...'' என்று அழுதுபுலம்பினாள், கமல குமாரி.

டைரெக்டர் சியாம்சுந்தர் சிறிது நேரம் யோசித்தார்.

''கமலா...இப்போ நீ உங்கம்மாவைப் பார்க்க-கிராமத்துக்குப் போனால் திரும்பி வர ஒரு வாரமாவது ஆகும்......அதுக்குள்ளே இந்த 'செட்' எல்லாம் வீணாகிப்

போகும்...அதனாலே, இதை மட்டும் நடிச்சிட்டுப் போய்விடு......மீதி ஷூட்டிங்கை, உங்க அம்மாவுக்கு ஆக வேண்டியதை யெல்லாம் செஞ்சிட்டு நீ வந்த பிறகு பார்த்துக்கலாம்...'' என்றார் டைரெக்டர்.

''ஆமாம்...அதுதான் சரி...'' என்று பக்கமேளம் வாசித்தார் வசனகர்த்தா.

கமல குமாரிக்கும் அது சரியென்றே தோன்றியது...''சரி ஸார்'' என்று தலையை ஆட்டினாள்.

''எல்லோரும் அவங்க அவங்க பிளேஸிலே ரெடியா இருங்க...'' என்று உத்தரவிட்டார் டைரெக்டர்.

கமல குமாரியும் செட்டில் நின்று நடிக்க ஆரம்பித்தாள். பெற்று வளர்த்த தாய் இறந்து விட்டாளென்றதால் பிறிட்டெழுந்த பெருந்துக்கம் அவளது சோக நடிப்பை சோபிக்கச் செய்தது. ஸ்டுடியோவில், கேமராவின் முன் நின்று தான் நடிக்கிறோம் என்ற உணர்வின்றி தத்ரூபமாய் நடித்தாள்.

டைரெக்டர் சியாம் சுந்தருக்குப் பரம திருப்தி. ''உம்...ஷூட்!'' என்றார்.

கேமிரா இயங்க ஆரம்பித்தது. படச்சுருள் விரைந்தோடலாயிற்று.

அந்த சோகக் கட்டத்தில், அவ்வளவு தத்ரூபமாகக் கமல குமாரியைப் போல், எந்த நக்ஷத்திர நடிகையாலும் நடிக்க முடியாதென்பது டைரெக்டர் சியாம் சுந்தரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

அவளா நடித்தாள்......இல்லை......தாய் இறந்துவிட்டாள் என்று தந்தியில் கண்ட விஷயம் அவளை நடிக்கச் செய்தது.

அவளது நடிப்பு முடிந்தது.

''விர்''ரென்று மேக்-அப் ரூமிற்குள் ஓடினாள். அவசரம் அவசரமாக 'மேக்-அப்'பை கலைத்துவிட்டு, ஏதோ யோசித்த வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்திருந்த டைரெக்டரிடம் வந்தாள்.

அவர் வாயும் மூக்கும் சிகரெட் புகையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

''டைரெக்டர் ஸார்...நான் போய் வரேன்...எங்க அம்மாவிற்கு ஆகவேண்டியதைச் செய்துவிட்டு கண்டிப்பாய் ஒரு வாரத்துக்குள்ளேயே வந்துடறேன் ஸார்...'' என்று நாத் தழுதழுக்கக் கூறிவிட்டு, டைரெக்டரின் பதிலையும் எதிர்பாராமல் செல்லத் திரும்பினாள் கமல குமாரி.

''கமலா...கொஞ்சம் இரு! காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்......'' என்றார் டைரெக்டர் அமைதியாக.

''காப்பி சாப்பிட இதுதானா ஸார் நேரம்?''

[தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்]

"ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது" என்பது பழமொழி. இந்த ஆமை, அமீனா வர்க்கத்தைச் சேர்ந்த சில புள்ளிகள் நம் படத் துறையிலும் இருக்கின்றனர். இவர்கள் கால் வைக்கும் இடம், காமதேனு, கல்பக விருக்ஷம் இரண்டுமே உள்ள இடமாயிருந்தாலுங்கூட, கண்டிப்பாக 'அரோகரா' ஆகிவிடும். பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் 'துடைகாலிகள்' என்று இவர்களைக் குறிப்பிட்டு விடலாம். அந்தமாதிரி பிரகிருதிகளில் இரண்டொருவரைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

* * *

வக்கீல் படிப்புப் படித்த ஒருவர் சென்னையிலுள்ளபிரபல ஸ்டுடியோ ஒன்றில் 'சட்ட ஆலோசகர் உத்தியோகத்தில் இருந்தார். தமது திறமையில் அவர் அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கை கொண்டவர். தமது திறமைக்கு ஏற்ற இடம் அந்த ஸ்டுடியோ அல்லவென்று நினைத்தார் போலும்! ஆகவே அந்த ஸ்டுடியோவில் தம் வேலையை உதறித் தள்ளிவிட்டு, வெளியேறினார். அதே சமயம், வேறு ஒரு பிரபல தொழிலில் நல்ல 'பணம், குணம், புகழ்' சம்பாதித்துக் கொண்டிருந்த ஒரு பிரமுகர் படத் தொழிலில் பிரவேசித்தார். அது அவருடைய போதாத காலத்தினால்தான் எனகூறவேண்டும். இல்லாவிட்டால் முன்னால் நான் குறிப்பிட்ட அந்தப் பிரபல ஸ்டுடியோ முதலாளிக்குப் போட்டியாக இத்தொழிலில் இறங்குவாரா? இந்தப் புதிய ஆசாமியிடம் போய்ச் சேர்ந்தார் 'சட்ட ஆலோசகர்.' அவ்வளவுதான்; புதிய ஆசாமி சீக்கிரமே "ஏண்டாப்பா சினிமாவில் காலை வைத்தோம்?" என்று திண்டாடித் திகைக்கும் சமயத்தில் அங்கிருந்து நழுவி விட்டார் இந்த 'அமீனாப் பேர்வழி!' அவருடைய 'திருப்பணி' முடிந்துவிட்டபின் அவருக்கு அங்கென்ன வேலை!

* * *

இந்தப் பேர்வழி அதன் பிறகு 'கண்ட கண்ட' இடங்களிலெல்லாம்

பிரபல சாந்தாராம் தயாரிப்பான ராஜ்கமல் கலா மந்திரின் "தா ஹேஸ்" என்ற ஹிந்திப் படத்தில் நடிக்கும் கரன் திவான்.

கெம்ப்ராஜ் புரொடக்ஷன்ஸின் "ராஜா விக்கிரமா" தமிழ்ப் படத்தில் டைரெக்டர் கெம்ப்ராஜும், எம். வி. ராஜம்மாவும் நடிக்கும் ஒரு ரஸமான காதல் கட்டம் இது.

உத்தியோகம் பார்த்துவிட்டு, (அங்கெல்லாம் மங்களம் பாடிவிட்டுத்தான்!) மீண்டும் முதல் பிரபல ஸ்டுடியோ முதலாளியிடமே சரணுகதி அடைந்தார். அங்கே உத்தியோகமும் கிடைத்து விட்டது அவருக்கு! அவர் மீண்டும் வந்து சேர்ந்த சில தினங்களுக்குப் பின், அந்த ஸ்டுடியோவில் ரஸமான ஒரு விஷயம் நடந்தது. அந்த ஸ்டுடியோவிலுள்ள தியேட்டரில், கதை–வசன கர்த்தா–டைரெக்டரான ஒரு ஹாஸ்ய நடிகர், தம் கோஷ்டியுடன், 'ரஷ்' போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். அது சமயம் தியேட்டருக்குள் ஒரு நிஜ ஆமையே வந்து விட்டது. உடனே அந்த டைரெக்டர்–மேற்படி 'துடைகாலி'ப்பேர்வழியின்பெயரைக் குறிப்பிட்டு—தம் பக்கத்தில் இருந்தவரிடம் "சரிதான், இவர் எப்பொழுது நம்ம ஸ்டுடியோவுக்கு வேலைக்கு வந்தார்?" என்று கேட்டார். கூட இருந்தவர்கள் அனைவரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

* * *

மற்றொரு 'ஆமைப் பேர்வழி'யும் மாஜீ வக்கீல்தான். 'கலையில் மறுமலர்ச்சி' செய்வதே தம் வாழ்க்கையின் லக்ஷியம்—என்று கூறிக் கொண்டே சினிமாத் துறையில் 'இடத்தை அடைத்துக் கொண்டு' காலம் தள்ளும் பிரகிருதி இவர். இவர் சினிமாத் துறையில் புகுந்து செய்ய முற்பட்ட காரியம் ஒன்றுவது இது வரை உருப்படவில்லை. இவர், நான் மேலே குறிப்பிட்ட பிரபல ஸ்டுடியோ முதலாளியைப் பற்றிக் குறைவாக,—"சினிமாவைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? ஏதோ அதிருஷ்டத்தினுல் அவருடைய படங்கள் வெற்றிகரமாக ஓடுகின்றன" என்று வெளிப்படையாகச் சொல்லி வந்தார். இனி

மேல் அப்படியெல்லாம் — வெளிப்படையாகவாவது! — சொல்ல மாட்டார். ஏனென்றால் எந்தப் பிரமுகருக்கு, 'ஒன்றும் தெரியாது' என்று சொன்னாரோ அதேபிரமுகரிடம்தான் இப்பொழுது வேலைக்கு வந்திருக்கிறார்!

• • •

இவ்வளவிலும் ஒரு விஷயம் ரொம்ப ரொம்ப ஆச்சரியம்தான். நான் மேலே கூறிய இரண்டு பேர்வழிகளும் பிரபல ஸ்டுடியோ முதலாளியிடம் வேலையில் இருந்தும்கூட, அவர் தொழில் நசித்துவிடாது மேலும் மேலும் ஓங்குவதுதான் வியப்பான விஷயம்! ஆனால் யோசித்துப் பார்த்தால் அதில் வியப்படைய ஒன்றுமில்லைதான்! 'தொட்டதெல்லாம் துலங்கும்'(ராஜயோகக்காரரான) அந்தப் பிரபல ஸ்டுடியோ முதலாளியிடம் இம் மாதிரிப் பேர்வழிகள் எவ்வளவு பேர்கள் வந்து அண்டினாலும் கூட அவரை அசைக்க முடியாது!

• • •

இந்த சந்தர்ப்பத்தில் மேற்குறித்த ஸ்டுடியோ முதலாளியின் நல்ல ராசிக்கு வேறு ஒரு உதாரணத்தையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. பலர் கூட்டாகச் சேர்ந்து ஆரம்பித்து நடத்திவந்த ஒரு ஸ்டுடியோ திவாலாகி,ஏலத்துக்கு வந்தது. அதைத்தான் இவர் எடுத்து நடத்த ஆரம்பித்தார். 'போயும் போயும் அந்த விடியாமூஞ்சி ஸ்டுடியோவை வாங்குகிறாரே?' என்று பலர் அந்த சமயத்தில் பயப்பட்டார்கள். ஆனால் அந்த விடியாமூஞ்சி ஸ்டுடியோவேதான்(இப்பொழுது புதிய பெயருடன்) இந்தியாவிலே உள்ள சிறந்த மூன்று ஸ்டுடியோக்களில் ஒன்றாக விளங்குகிறது!

• • •

பஞ்சாபைச் சேர்ந்த பிரபல நடனக்காரி ஒருத்தியைத் தமிழ்ப்பட உலகுக்கு அறிமுகப்படுத்திய ஒரு பட முதலாளி—டைரெக்டரை சமீபத்தில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன்.



N.P.8

"நான் பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன் அது கேசத்திற்கு ஆரோக்கியம் அளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம். என் அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன் தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது."

T. R. Rajakumari

PRESIDENT
VEGETABLE
HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET – MADRAS. I

Phone : 2884

இலங்கைக்கும், மலாய் நாட்டிற்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

அப்பொழுது அந்த நடனக்காரியின் பேச்சு வந்தது. அவள் தற்பொழுது தயாராகி வரும் ஒரு புராணப் படத்தில் அசுரன் தர்பாரில் நடனமாட ஒப்பந்தமாகி யிருப்பதைப் பற்றி அவரிடம் சொன்னேன், உடனே அவர், "அசுரன் தர்பாரில் நடனமாடத்தான் அவள் லாயக்கு!" என்று கூறினார். அவர் கூறியது என்னவோ முற்றிலும் உண்மைதான். அந்த நடனக்காரியின் தோற்றம் 'ராக்ஷஸ நடன'த்திற்கு ரொம்பவும் பொருத்தமானதுதான்!

* * *

அடுத்தபடி படங்கள் ஸென்ஸார் செய்யப்படும் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தோம், அவர் ஸென்ஸார் போர்டு மெம்பர்களில் சிலரின் விசித்திர மனப்பான்மையைப்பற்றிப் பல ரஸமான தகவல்களைக் கூறினார். சென்ஸார்போர்டு அங்கத்தினர்களில் ஒருவர் ஒரு சமயம், அவர் தயாரித்த படம் ஒன்றைப் பார்த்துவிட்டு, "பரத நாட்டியம் ஆடுவதெல்லாம் சுத்த 'ஹம்பக்' ஸார்" என்றாராம், ஆனால் அதே ஆசாமி தம் பேத்தி நாட்டியமாடுவதை 'ஹம்பக்' என்று கருதாமல் 'கலை' என்று இப்பொழுது போற்றுகிறார்!

* * *

சமீபத்தில் நடந்த ரஸமான விஷயம் இது. இன்று பிரபலமாக உள்ள நாட்டிய சகோதரிகளில் ஒருத்தியின் மீது, ஒரு படக் கம்பெனியின் ப்ரொடக்ஷன் மானேஜருக்கு 'சபலம்' ஏற்பட்டுவிட்டது. தன் உள்ளத்தை அவளிடம் நேருக்கு நேர் திறந்து பேச அவருக்கு துணிச்சல் ஏற்படவில்லையோ; அல்லது சங்கோஜமாக இருந்ததோ தெரியவில்லை. ஒரு கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டார். அந்த நாட்டியக்காரி ரொம்பத் துடுக்குக்காரி. அவள் பிரபல நடிகர் ஒருவரிடம் தனக்கு வந்த அந்தக் கடிதத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி, ப்ரொடக்ஷன் மானேஜரின் மானத்தை வாங்கிவிட்டாள்!

குண்டூசியைக் கேளுங்கள்

இந்த ஊசியில் வெளி வந்துள்ள கேள்விகள் அவ்வளவும் 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்குக் காணிக்கை அளித்த வாசகர்களின் கேள்விகள்

—ஆசிரியர்

எம். இ. தங்கள் மைதீன் (குலமாணிக்கம்)

வி. டி. ராஜகாந்தத்தின் சொந்த ஊர் எது? அவருக்கு வயது என்ன ஆகிறது? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்!

ராஜகாந்தத்தின் சொந்த ஊர் கோயமுத்தூர். அவருக்கு தற்போது 33 வயது ஆகிறது.

* * *

என். எஸ். கிருஷ்ணன், சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் ஆகிய மூவருள் ஹாஸ்ய நடிப்பில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்!

தற்போதைக்கு சாரங்கபாணிக்கே அந்த ஸ்தானத்தை அளிக்கவேண்டும்.

"குண்டூசி காதலன்"

மார்ச் மாத குண்டூசியில் 'நுனிப்புல்' பகுதியில், "அளவுக்கு மீறிப் பழகுவது வெறுப்பையேவளர்க்கும்" என்று குறிப்பிட்டிருப்பது........., ..., ஆகிய இருவரையும்தானே குறிக்கிறது?

'வாசகர்கள் சரியானபடி ஊகித்துக் கொள்ளுவார்கள்'—என்ற "வெட்டுக்கிளி"யின் நம்பிக்கை வீண் போகவில்லை!

எம். எம். கிருஷ்ணன் (மீட்டணமல்லி)

சாவித்திரி படத்தில் நடித்த சாந்தா ஆப்தே தற்போது ஏதேனும் தமிழ்ப் படத்தில் நடிக்கிறாரா?

மீண்டும் ஒரு தமிழ்ப் படத்திலாவது நடிக்க வேண்டும் என்ற ஆசைதான் அவருக்கு. ஆனால் தமிழ்ப்பட முதலாளிகள் சந்தர்ப்பம் அளித்தாலல்லவா அதற்கு?

டி. ராஜாங்கம் (ஹநுமந்தபுரம்)

டி. ஆர். ராஜகுமாரிக்கு எத்தனை சகோதர சகோதரிகள்? அவர்களும் சினிமாவில் நடிக்கிறார்களா?

ராஜகுமாரிக்கு உடன் பிறந்தவர்கள் இரு தங்கைகளும், மூன்று தம்பிகளும் ஆவர். அவர்களில் யாரும் சினிமாவில் நடிக்கவில்லை.

எஸ். எஸ். ஆர். லிங்கம் (கூமாப்பட்டி)

அண்ணாத்துரை எழுதிய "தம்பித் துரை" கதையை என். எஸ். கிருஷ்ணன் படமாகத் தயாரிக்கப் போவதாய் விளம்பரம் வந்ததே? அது என்னவாயிற்று?

விளம்பரத்தை வெளியிட்ட பின்னர், "'அண்ணன்' 'தம்பி'க்கிடையே பிரிவினை ஏற்படுத்துவது கூடாது" என்று என். எஸ். கே. யுக்குத் தோன்றி விட்டது! ஆதலால் அவர்களை இணை பிரியாமலிருக்கும்படியே விட்டுவிட்டு ஒரு "மணமகளை" அவர் தேடிப் பிடித்திருக்கிறார் இப்பொழுது.

• • •

தமிழ் நாட்டு டைரெக்டர்கள், பட முதலாளிகள் சிலரது வாழ்க்கை வர்ணனையை தாங்கள் எழுதி, "குண்டூசி"யில் வெளியிட வேண்டும் என்பது என் ஆசை?

லாவண்யா பிக்சர்ஸ் தயாரிப்பான ''பாரிஜாத''த்தில் ருக்மணியாக நடிக்கும் எம். வி. ராஜம்மாவும், அவருடன் தோழியாகத் தோன்றும் பார்வதியும்.

தங்களைப் போன்ற வாசகர்கள் ஆசைப்படுவதை நிறைவேற்றி வைப்பதுதான் என் வேலை. ஆதலால் சீக்கிரமே எழுதுகிறேன்.

என். தங்கய்யா (வண்டிப் பெரியர்)

அமரகவி படத்தில் எம். கே. டி. பாகவதருடன் நடிக்கும் நடிக நடிகைகள் யாவர்?

''அமரகவி''யே அந்நாத்திலிருக்கும் போது, கூட இருப்பவர்களைப்பற்றி நான் என்ன கூறக் கிடக்கிறது?

ஏ. பழனிசாமி (இராசீபுரம்)

லலிதா-பத்மினி இவர்கள் பெரும்பாலும் ஆணும் பெண்ணுமாகவே நடிக்கிறார்களே?

நீர் கவலைப் படாதேயும்! அவர்கள் ஒருக்காலும் ஒருவரையொருவர் மணந்து கொண்டு சதிபதிகளாக வாழ முடியாது!

சுகுமாரன் (பம்பாய்)

அநேக டைரெக்டர்கள் எஸ். எஸ். வாஸனைப் போல் டைரெக்ட் செய்ய வேண்டுமென்றும், அநேக நடிகர்கள் பாகவதரைப் போலவும், நடிகைகள் டி. ஆர். ராஜகுமாரியைப் போலவும் நடிக்க வேண்டும் என்றும் முயலுகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் தோல்வியே அடைவதேன்?

தனிப்பட்ட முறையில் எதையாவது செய்தால்தான் தனிச் சிறப்பேற்படும். ஒருவர் செய்ததையே இன்னொருவர் செய்தால், முந்தினவருக்கே புகழ் அதிகரிக்கும். பிந்தினவருக்கு தோல்வியே மிஞ்சும்.

பி. சுப்பய்யா தேவர் (திரிகூடபுரம்)

எம். ஜி. ராமச்சந்திரனின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? வயது என்ன இருக்கும்? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

கொல்லங்கோட்டிற்குச் சமீபமுள்ள வடவனூரைச் சேர்ந்த ராமச்சந்திரன் நாயர் ஜாதியில் பிறந்தவர். அவருக்கு 34 வயதாகிறது. அவர் தற்போது ஜூபிடரின் ''மர்ம யோகி'' மாடர்ன்

தியேட்டர்ஸாரின் "மந்திரி குமாரி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

அ. கிருஷ்ணஸ்வாமி படையாச்சி (பண்ருட்டி)

வாழ்க்கையில் வைஜயந்தி மாலா ஒரு பாட்டுகூடப் பாடவில்லையா? இல்லையென்றால், ஏன்? அவருக்குப் பாடத் தெரியாதா?

வைஜயந்திக்குப் பாடத் தெரியும். ஆனால், "வாழ்க்கை"யில் அவர் பாடவில்லை. 'பாட்டு, நடிப்பு இரண்டிலுமே புது முயற்சியில் ஈடுபடுவதற்குப் பதில், புதிய நடிகை வைஜயந்திக்கு, முன்னரே ஜனங்களின் மனதைக் கவர்ந்துள்ள ஒரு பாடகியின் இரவல் குரலைச் சேர்த்தால் வெற்றி சுலபமாயிருக்கும்—என்று டைரெக்டர் மெய்யப்பன் கருதியிருக்கக்கூடும்.

எஸ். சண்பகவனப் பெருமாள் பிள்ளை (சாப்பூர் வடகரை)

ஜெமினியின் ஔவையார் படம் என்னவாயிற்று? எப்பொழுது வெளிவரும்?

"ஔவையார்" படம் அநேகமாக முடிவடைந்து விட்டது. இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நீர் அதைக் காணலாம்.

மாசிமலை செட்டியார் (காக்காவரி)

தற்கால சினிமா மக்களைச் சீர்திருத்தி, நல்ல வழியில் செலுத்துமா? அல்லது சீர்கேடான வழியில் இழுத்துச் சென்று படுகுழியில் தள்ளுமா?

சினிமாவால் நன்மையும் ஏற்படக்கூடும்; தீமையும் ஏற்படக்கூடும். எல்லாம் படங்களைத் தயாரிப்பவர்களின் மனப் பான்மையைப் பொருத்திருக்கிறது. அவர்கள் கடமையிலிருந்து தவறாமல் இருக்கும்படிச் செய்ய வேண்டியது தணிக்கை போர்டாரின் கடமை ஆகும்.

கே. வி. ராமாநுஜம் (தேவலாலி)

தமிழ்ப் படங்களில் பின்னணி கீதம் பாடுபவர்களுள் முன்னணியில் நிற்பவர் யார்? அதிகப் பணம் பெறுபவர் யார்?

டி. கே. பட்டம்மாள்தான் என்று தெரிகிறது.

1950-51ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1950-51ற்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. *1—4—0* (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோசிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHREE SATNARAIN JYOTISH ASHRAM, (G.M.) Nakodar (Punjab).

முதலாளி :—டைரக்டர் ஸார்! நாம் ஐம்பதே 'கால்'ஷீட்டிலே படத்தை முடிச்சுடனுமாம். தெரிந்ததா?

டைரெக்டர் :—இதற்கெல்லாம் நீங்க என் பயப்படுறீங்க? நேற்றைக்குத் தான் ஐயாயிரம் 'கால்ஷீட', அச்சரகி வந்திருக்கு? எனக்குத் தெரியும்......

. ஜே. ஆர். எஸ். சர்மா, சென்னை.

ரஸிகர்களின் ஆவலைத் தணிக்க நம் நக்ஷத்திரங்கள் தங்கள் கையெழுத்தைப் போட்டுத் தருகிறார்களா? எனின், யார் யார் இப்படிச் செய்கிறார்கள்?

தகுந்த முயற்சி எடுத்துக் கொண்டால் பல நக்ஷத்திரங்களிடம் கையெழுத்து வாங்கி விடலாம். ஆனால் சிலருக்கு க்கையெழுந்தே போடத் தெரியாது என்பதை நீர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்!

மாரிப்படையாச்சி(உளுந்தூர்ப்பேட்டை)

ராஜகுமாரி கட்டிவந்த தியேட்டர் முடிவடைந்து விட்டதா? எப்பொழுது திறக்கப்படும்? அதன் பெயர் என்ன?

தியேட்டரின் வேலை அநேகமாக முடிவடைந்து விட்டது. இன்னும் ஒரு மாதத்திற்குள் திறக்கப்படலாம். இந்த தியேட்டருக்கு "நேதாஜி தியேட்டர்" என்று பெயர் வைக்கப் போவதாகக் கேள்வி.

வி. கோவிந்தராஜுலு (திருக்கோயிலூர்)

ஜெமினி ஞான சௌந்தரியில் நடித்த வி. எஸ். சுசீலா தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

"இதய கீத"த்தில் நடித்துவரும் வி. சுசிலா இவரேதான்.

எம். தாமோதரன் (ராணிப் பேட்டை)

எஸ். வரலக்ஷ்மியின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? வயதெத்தனை? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

ரொம்பவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நீர் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்! அவருக்கு விவாஹம் ஆகியிருந்தால் மிக நலமாய்த்தானிருந்திருக்கும். ஜகம்பேட்டையைச் சேர்ந்த ஒரு நாயுடு குடும்பத்தில் பிறந்த அவருக்கு இப்பொழுது 21 வயதாகிறது.

எச். வி. கோவிந்தசாமி (ஹாஸன்)

சந்திரலேகா, நாம் இருவர், நவஜீவனம் ஆகிய படங்களில் தம்பியாக நடிப்பவர்கள் முறட்டுத் தனமாகக் காட்சி யளிக்கிறார்கள். இது தம்பிகளாக உள்ளவர்களுக்கு அவமானம் அல்லவா?

அவமானமாயிருந்தால், நம் தம்பிக்ள் ஒரு மஹாநாட்டைக் கூட்டி, ஆக்ஷேபனை தெரிவித்துக் கொள்ளலாமே!

எஸ். காதர் மைதீன் (மூலனூர்)

எம். கே. டி. பாகவதர் தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

வெகு காலத்திற்கு முன்பே "அமரகவி"யில் நடிப்பதென்று திட்டமிட்டு நியூட்டோனில் பூஜை நடத்தப்பட்டது. ஆனால் சமீப காலமாய் இந்த யோசனை "வழ வழா" ஆகிவருகிறது. ஜெமினியில் பாகவதர் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். கதை தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாகக் கேள்வி. இதற்கிடையில் ஒரு படத்தைத் தாமே தயாரிக்க பாகவதர் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாராம்.

பி, செல்லம் (குளுக்கப்பாறை)

விஜய குமாரியில் ராஜகுமாரி பாடுவது சொந்தக் குரலிலா?

ஆம்; சொந்தக் குரலில்தான்.

டி. எம். பி. ரதிகாந்தன் (வேலூர், சேலம்)

நான் ஒரு கதையை எழுதியிருக்கி

இந்த வேஷத்தைப் பார்த்தாலே "மந்திரி குமாரி" யில் நடராஜனுக்கு 'ராஜ யோகம்' ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது அல்லவா?

அந்தக் கடைக்கண் பார்வையால் மச்ச ராஜாவை மயக்குகிறுர், மச்ச ராணி எஸ். வரலக்ஷ்மி (மச்சரேகை)

"மச்சரேகை"யை சிக்கிரமாய
வெளியிட முயன்று வருகிறார்
மச்சராஜா டி. ஆர். மஹாலிங்கம்.

ஆனந்தமான சிரிப்பின் மூலம் ரசிகர்களுக்கு ஆனந்தத்தை அளிக்க முயல்கிறார் மிஸ். குமாரி—"சசிதரன்" மலையாளப் படத்தில்.

நந்தலால் புரொடக்ஷன்னின் ''மாயா ரம்பா'' (தெனுங்கு-தமிழ்ப் படத்தில் அஞ்சலி தேவிக்கு பிரதம பாகம் கிடைத்திருக்கிறது.

வெற்றிமாலை தான் எனினும்
சுமப்பது சிரமமாய் இருக்கி
றது போலும்! லாவண்யா
வின் ''பாரிஜாத''த்தில்
பி. எஸ். சரோஜா.

அசுரனைக் கண்டு அணங்கு
நடுங்குகிருள். "பாரிஜாத"த்
தில் ஏ. ஆர். பாலசுப்ரமண்ய
மும், எஸ். மேனகாவும்.

வெகு காலத்திற்குப் பிறகு, பிரபல ஜெயம்மாவை கெம்ப்ராஜின் "ராஜா விக்ரமா" தமிழ்ப் படத்தில் சந்திக்கலாம்.

றேன். எந்த ஸ்டுடியோவாவது அதைப் படமாக்க முன் வருவார்களா?

நீர்-கதை எழுதிவிட்டது பெரிய விஷயமல்ல; ஆனால் அதை யாராவது படம் பிடிக்க முன்வரவேண்டுமே அதுதான் பெரிய விஷயம்! எதற்கும் முயற்சியும்.

பி. பழனி (திருச்சி)

டி. ஆர். ராஜகுமாரியின் வீட்டு விலாஸம் என்ன?

"கன்னிகா குமாரி பவனம்," ஹபிபுல்லா ரோடு, தி. நகர், சென்னை—என்று எழுதும்.

எம். கே. கொச்சு குஞ்சன் (தஞ்சாவூர்)

பக்ஷிராஜா, ஸென்ட்ரல், மாடர்ன் தியேட்டர்ஸ், ஜெமினி, நியூடோன், ஏவி. எம்.— இந்த ஸ்டுடியோக்களின் விலாஸங்களைத் தெரிவிக்கவும்.

பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோயமுத்தூர்; ஸென்ட்ரல் ஸ்டுடியோ, கோயமுத்தூர்; மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்; ஜெமினி, கெதிட்ரல், சென்னை; நியூடோன் ஸ்டுடியோ, கீழ்ப்பாக்கம், சென்னை; ஏவி. எம். ஸ்டுடியோ, கோடம்பாக்கம், சென்னை.

வி. ஸ்ரீநிவாஸன் (மண்டியா)

அஞ்சலி தேவி, குமாரி கமலா, வைஜயந்தி மாலா, ராஜகுமாரி இவர்களுள் நடனத்தில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

குமாரி கமலாவுக்குத்தான்.

"பாஜி" (தநன்காசி)

நாகூர் டைரெக்ட் செய்யப் போகும் அமர கவி வெற்றி பெறுமா? அல்லது லைலா மஜ்னுவைப் போல் தோல்வியாக முடியுமா?

"லைலா மஜ்னு"வின் தோல்விக்கு நாகூரையே பூராப் பொறுப்பாளியாகச் சொல்ல முடியாது. ஒரு படம் தோல்வியுற்றால் பிறகு அதன் டைரெக்டர் கை வைக்கும் படமெல்லாம் தோல்வியாகி விடுமென்றோ, ஒரு படம் வெற்றிபெற்றால் பிறகு அதன் டைரெக்டர் கை வைக்கும் படமெல்லாம் வெற்றியாகி விடும் என்றோ நினைப்பது தவறு.

* * *

சமீபத்தில் சர்க்காரால் நடத்தப்பட்ட பிலிம் தோதவில் வேலைக்காரி

பங்கஜா அலங்கார [illegible] வெளியிடான "தஹேஸ்" ஹிந்திப் படத்தில் பிரபல வட இந்திய நடிகை ஜெயஸ்ரீ நடிக்கிறார்.

படம் ஏன் சேர்க்கப்படவில்லை? அண்ணாத்துரையால் கதை, வசனம் எழுதப்பட்டது என்றதனலா?

கலைக்கு ஜாதியும் கட்சியும் கிடையாது. பக்ஷபாதமாக சர்க்கார் தேர்தலை நடத்தவும் இல்லை. போட்டியில் "வேலைக்காரி" கலந்துகொள்ளாதது சர்க்காரின் தவறு என்ன?

* * *

பாலய்யாவை கட்டபொம்முவாகவும், ராதாவை ஊமைத்துரையாகவும், ரஞ்சனை ஆங்கிலேயனாகவும் நடிக்கச் செய்து, கட்டபொம்மு கதையை ஜெமினி ஸ்டுடியோ படமாகத் தயாரித்தால் என்ன?

தயாரிக்கலாம். ஆனால், அது அவர்கள் இஷ்டத்தையும் சௌகரியத்தையும் பொருத்ததல்லவா?

ஆர். மனோதைரியம் (பாகனேரி)

கண்ணாம்பா, பானுமதி, எஸ். வரலக்ஷ்மி, லக்ஷ்மி தேவி லக்ஷ்மி பிரபா, காஞ்சனமாலா, இவர்களுள் சோக நடிப்பை அதி சிறப்பாக நடிக்கக் கூடியவர் யார்?

கண்ணும்பா சோக நடிப்பிற்கென்றே பிறந்தவ ராயிற்றே ?

கே. தங்கவேல் (அரூர்)

குமாரி கமலா, லலிதா—பத்மினி, தாரா சௌத்ரி, சௌதாமினி, வைஜயந்தி மாலா இவர்களில் நாட்டியத் திறமையில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம் ?

பரத நாட்டியத்தில் கமலாவுக்கும், பல்வகை நடனங்களில் லலிதா-பத்மினிக்கும் முதல் ஸ்தானம் அளிக்கலாம்.

எஸ். கந்தஸ்வாமி (யாழ்ப்பாணம்)

"மன்னிக்கவும்" என்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் "சொரி"யா, அல்லது "ஸாரி"யா? "ஸாரி" "ஸாரி" என்று ("வாழ்க்கை"யில்) வைஜயந்தி ஏன் இப்படிக் கொலை செய்திருக்கிறார் ?

அவர் கொலை செய்யவில்லை. அந்தக் குற்றத்திற்கு ஆளாகுபவர் நீர்தான்! "ஸாரி" என்பதே சரியான உச்சரிப்பு. தெரிந்ததா ?

என். மில்லர் (யாழ்ப்பாணம்)

விசித்திர வனிதாவில் நடித்த பி.எஸ். சரோஜா மறு விவாஹம் செய்து கொண்டு விட்டாரா ?

இல்லை. ஒருவர் எத்தனை தரம்தான் விவாஹம் செய்து கொள்ளுவது !

முஹம்மது முஹைதீன் (ஹிங்குலை)

நான் ஜெமினியில் சேர விரும்புகிறேன். அதற்குத் தேவையானது என்ன ?

நல்ல பெரிய இடத்து சிபார்சு !

* * *

சினிமா நடிக நடிகைகளை நேரில் பார்ப்பதற்கு காசு கொடுக்க வேண்டுமா ?

அவர்களைப் படத்தில் பார்ப்பதற்குக் காசு கொடுக்கிறீரே; அது போதாதா? ஆனால் இவர்களில் சிலரை நீர் நேரில் பார்த்து விட்டாலோ, 'அவர்களைப் பார்த்ததற்கு அவர்கள்தான் உமக்குக் காசு கொடுக்க வேண்டும்' என்று சொல்ல ஆரம்பித்து விடுவீர் !

ரொக்கப் பரிசு ரூ. 1000
(ஒரு அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப் பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த் தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களை கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0 ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

PRINCIPAL, BENGAL MESMERISM HOUSE (G.M.) Jullunder City, Pb.

* படங்களில் பள்ளி ஆசிரியர்

பள்ளி ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்தினால்தான் நம் சமூகம் முன்னேற்றமடையலாமென்றும், பள்ளிகளில் தற்போது காணப்படும் ஒழுங்கீனங்கள் நீங்குமென்றும், மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசாரம் ஒரு புறம் நடந்துகொண்டிருக்க, 'சிவகவி', 'லைலா மஜ்னு' போன்ற படங்களில் உபாத்தியாயர்களை (ஹாஸ்யத்தின் பெயரால்) தாழ்வுபடுத்துவது சமூகத்திற்கே துரோகம் செய்வதாகும். இம்மாதிரிப் படங்களைப் பார்க்கும் மாணவர்கட்கு எங்ஙனம் ஆசிரியர்பால் மரியாதை ஏற்படும்? ஏன் பள்ளிகளில் ஒழுங்கீனம் தலைவிரித்தாடாது? இம்மாதிரிப் படங்களைப் பார்த்த பிறகு ஆசிரியர் வேலையை மேற்கொள்ள இளைஞர்களுக்கு எப்படி உத்சாகம் ஏற்படும்?

நாம் நம்முடைய பணத்தை ஒரு பாங்கில் போட்டு வைத்தால், அந்த பாங்கின் க்ஷேம லாபம், நன்மதிப்பு, அந்தஸ்து இவைகளைக் குறித்தெல்லாம் நாம் விசேஷ அக்கரை கொள்வதுபோல், நம்முடைய உயர்ந்த பொக்கிஷமாகிய குழந்தைகளை விட்டு வைத்திருக்கும் ஆசிரியர்கள் விஷயத்திலும் அக்கரை கொண்டு, இம்மாதிரி சங்கடங்களினின்றும் அவர்களைக் கைதூக்கி விடுவது பொது ஜனத்தின் கடமையன்றோ?

வி. ருக்மணி
சிதம்பரம்.

ஆபாச ஹாஸ்யம்

சில தமிழ்ப்படங்களில் ஹாஸ்யம் என்ற பெயரால் ஆபாசமான சம்பாஷணைகளைப் புகுத்தி வருவது கண்டிக்க வேண்டியதோர் விஷயமாகும். மானிகள் தலை குனியும் வகையில், இரண்டு அர்த்தங்களில் சிலேடையாக இரு ஆண் பெண் ஹாஸ்ய நடிகர் பேசிக்கொள்வது தமிழ்ப் படங்களுக்கே இழுக்கை விளைவிக்க வல்ல செய்கையாகும். இதை ஹாஸ்யமாக பாவிப்பது தமிழருக்கு அவமானமாகும். தணிக்கை போர்டாரும் மற்ற அதிகாரிகளும் இக்குறையை நிவர்த்திக்க வேண்டியது மிக அவசியம்.

எஸ். வாசுதேவன் எம். ஏ., பி. டி.,
சிதம்பரம்.

தமிழில் 'மாதிரிப் படங்கள்'

ஆங்கில, ஹிந்திப் படங்களின் வெற்றிக்கு, அவர்களது 'மாதிரிப் பட'ங்களும் ஒரு காரணமாகும். அப்படத் தயாரிப்பாளர்கள் அந்தந்தப் படங்களிலுள்ள ரஸிக்கத்தக்க, மக்களின் மனதைக்கவரக்கூடிய கட்டங்களை, சுமார் ஐந்து நிமிஷ நேரம் காட்டக் கூடியபடி தொகுத்து, அப்படங்களை திரையிடப்போகும் தியேட்டருக்கு அனுப்பிவிடுகின்றனர். தியேட்டரில், அக்குறிப்பிட்ட படம் வருவதற்கு முன்பே அதன் 'மாதிரிப் படம்' காட்டப்படுகின்றது. இதனால் நேயர்களிடையே அக்குறிப்பிட்ட படத்தைப் பார்க்க வேண்டுமென்ற அவா அப்போதே ஏற்பட்டுவிடுகிறது. எனவே; அவைகளைப்போன்று, தமிழ்ப் படங்களிலும் 'மாதிரிப் பட'ங்கள் பிடித்து, தமிழ்ப் படவுலகில் புதியதோர் மாறுதலை உண்டாக்கி, பிறமொழிப் படங்கள் பெறும் நன்மதிப்பை தமிழ்ப் படங்களும் பெற வேண்டுமென்பது என் போன்றோரின் நீண்ட நாளைய அவா. சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

''தமிழ் மகன்''
கொழும்பு-12.

ரஸிகர்கள் திருந்த வேண்டும்

தென்னிந்தியாவில் நூற்றுக் கணக்கான சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. அவற்றில் நூற்றுக்கு 20 சத வி

* பரிசு பெற்ற கடிதம் எழுதியவர் — வி. ருக்மணி, ஓமக்குள சத்திரம், சிதம்பரம்.

தம் கூட ஒழுங்கான முறையில் கட்டப்படவில்லை. இக்கொட்டகைகளில் படம் பார்க்க வரும் மக்கள், அதிலும் "தரை மஹா ஜனங்கள்" கொட்டகைக்குள் செய்யும் அக்கிரமங்களும் அசுத்தங்களும் சொல்லத் தரமில்லாதவை. சினிமாக் கொட்டகை "ஒரு பொது இடம்" என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். கண்ட இடங்களில் எச்சில் துப்பியும், சிறுநீர் கழித்தும், பாதி ஆட்டத்தில் எழுந்து நின்று கொண்டும், புகை பிடித்தும், சீட்டியடித்தும், கொட்டகையை ஒரு ஆபாசக் கூடமாகச் செய்துவிடுகின்றனர். துஷ்ட சகவாசத்தினால் கெட்டு, தான்தோன்றிகளாய் அலையும் பிள்ளைகளுக்கு, இக்கொட்டகைகள் ஒரு அடைக்கல ஸ்தலமாக விளங்குகின்றன. இச்சிறுவர்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் புகை பிடிக்க இக்கொட்டகைகளையே நாடுகின்றனர். காற்றோட்ட மில்லாத சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் முறையில் அமைக்கப்பட்ட கொட்டகைகளில் புகை பிடிப்பதனால், அப்புகை எல்லோருடைய சுவாசத்திலும் கலந்து, க்ஷயம், ஆஸ்த்மா முதலிய வியாதிகளை பரவச் செய்கிறது. அரசாங்கத்தாரென்னவோ, தங்கள் கடமைக்காகப் புகை பிடிப்பதற்குத் தடை உத்தரவு போட்டு விட்டனர். கொட்டகை முதலாளிகளும் தங்கள் கடமைக்காக, அவ்வுத்திரவை மீற முடியாமல், "அரசாங்க உத்திரவு, தியேட்டருக்குள் யாரும் புகைபிடிக்கக் கூடாது" என விளம்பர ஸ்லைடுகளை காட்டுகின்றனர். ஆனால் புகை பிடிப்பதென்னவோ நிற்கவில்லை. என்னைக் கேட்டால் ரஸிகர்கள்தான் திருந்தவேண்டும் என்பேன். நேரிடக்கூடிய தீமைகளை உணர்ந்து அவர்களே நிறுத்தினால்தான் நலம்.

டி. என். நரசிம்ம மூர்த்தி
நாமக்கல்.

நடன தம்பதியினர்:—எப்படியாவது உங்கள் படத்தில் ஆடுவதற்கு எங்களுக்கு 'சான்ஸ்' தந்தே ஆகணும் ஸார்.

டைரெக்டர்:—அடுத்த படத்திலே நான் கண்டிப்பாய்த் தருகிறேன். நான் இப்பொழுது எடுத்துக் கொண்டிருப்பது ரொம்ப சின்னப் படம் ஆச்சே......!

சர்க்கார் கவனிப்பார்களா

'இந்திய செய்திப் படங்கள்' என்ற பெயரை மாற்றி, 'இந்தியக் கைத்தொழில் படங்கள்' என்ற பெயரை வைத்தால் மிகவும் நன்மையைப் பயக்கும். பெயர் வைத்து விட்டால் மட்டும் போதாது. பெயருக்குத் தகுந்தவாறு படங்களையும் தயாரிக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்க இம்மாதிரிப் படங்கள் மிகவும் உதவியை அளிக்கும். தற்காலத்தில் நம் நாட்டில் எவ்வளவோ குடிசைத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன—புதிய முறையில் அல்ல; பழைய முறையில்தான். இதனால் தேவைக்கு அதிகமான பொருள்களைச் சேகரிக்க முடிவதில்லை. இன்றைய நிலையில் ஐக்கிய அமெரிக்கா கைத்தொழில் மிக்க நாடாகவும்செல்வம் மிக்க நாடாகவும் விளங்கி வருகிறது. புது முறையில் எவ்வாறு கைத்தொழிலை நடத்துவது என்பது போன்ற உபயோககரமான விஷயங்களடங்கிய படங்களைப் பிடித்து ஜனங்களுக்குக் காண்பித்தால் மிகவும் நன்மையா யிருக்கும். இந்த மாதிரிப் படங்களைத் தொழிலாளிகளும் மிகவும் உத்சாகத்துடன் பார்க்க முன்வருவார்கள். விவசாயத்தைப் பற்றிய விஷயங்களையும், புது முறையில் எவ்வாறு விவசாயம் நடத்தப்படலாம் என்பதையும், பயிர்களை நாசம் செய்யும் பூச்சுகளை எவ்வாறு அழிப்பது போன்றவைகளையும் படமாகக் காண்பித்தால் விவசாயம் முன்னேறும். விவசாயத்தில் மேல்நாடுகள் எவ்வளவோ முன்னேறி யிருந்தும் நம் நாடு இன்னும் பிற்போக்கான நிலைமையிலே

இருப்பது யாவரும் அறிந்ததே. இதை சர்க்கார் உடனே கவனித்து அதற்கு வேண்டியதைச் செய்வார்களா?

தொ. கு. இராசமாணிக்கம்
தொப்பப்பட்டி.

இடமில்லையா ?

"கலையை வளர்க்கவேண்டும்; அதற்காகப் பாடுபடவேண்டும்" என்ற வாய்ப் பேச்சு வீரர்கள் சிலர். இன்னுஞ் சிலர் "ஏன், கலையைத்தான் இப்பொழுது சினிமா உலகம் வளர்த்து வருகிறதே!" என்பர். இவர்கள் கூறுவது உண்மையா? இன்றைய சினிமா உலகமோ கலை என்னும் சாதனத்தைக் கொண்டு காமக் கூத்தையே மக்களிடை பரப்பி வருகிறது. ஒரு மங்கை சினிமாவில் நடிக்க முன்வருவதால், நிச்சயம் தன்னெறி தவறி விடுவாள் என்பது என் எண்ணம். எப்படியெனில், சினிமாவில் காணும் மேக்கப்புகளில் மார்பகங்களில் செய்யும் மேக்கப்தான் அபாரம்! அதில் என்னென்னவோ அலங்காரங்கள் உள்ளன. அவைகளைப் பார்க்கக்கூடக் கண் கூசுகிறது. இவ்வித அலங்காரம் ஒரு கிழவனுக்குக்கூட உணர்ச்சி ஏற்படாமலிருக்க முடியாது. இன்னுஞ் சில நடிகைகள் (பத்திரிகைகளில்) பச்சையாக எழுதியுள்ளபடி, படமுதலாளி, டைரெக்டர் ஆகிய இவர்களின் வலையில் சிக்காமலிருக்க முடியாது. நெறி தவறியபின் வெளியில் சொல்ல வாய் இல்லாமல் ரகசியத்தை மறைத்து விடுகின்றனர். ஆகவே, ஆபாசமான உடைகள் விஷயத்தில் கவனம் செலுத்தப்பட்டு, அது நீக்கப்படும்வரை, படத் தொழில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் முறை தவறி நடப்பதை நிறுத்தும்வரை, குடும்ப ஸ்த்ரீகள் படத் தொழிலில் ஈடுபடுவதற்கு இடமேயில்லை!

ரதன்,
கடலூர்.

கள்ள மார்கெட் ஒழிக

பம்பாயில் எந்த தமிழ்ப்படம்வந்தாலும் டிக்கெட்டுகள் கிடைப்பது ரொம்பக் கஷ்டம். 'அட்வான்ஸ் புக்கிங்' என்ற ஒரு புதிய வழக்கத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். சில பேர்கள் இந்த அட்வான்ஸ் டிக்கெட்டுகளை வைத்துக் கொண்டு தியேட்டரின் வாசலில் கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்கிறார்கள். உதாரணமாக, சமீபத்தில் 'ஆதித்தன் கனவு', 'நவஜீவம்' ஆகிய இரு தமிழ்ப் படங்களுக்கும் அநேக பேர்கள் கள்ள மார்கெட் டிக்கெட்டு வாங்கி சினிமாப் பார்த்தார்கள். இந்த விஷயத்தை பம்பாய் மாகாண சர்க்கார் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இ. ராஜாமணி
பம்பாய்.

சென்ஸார் கவனிக்கட்டும்

சிறுவர்கள் பார்க்கக்கூடாத சில ஆங்கிலப் படங்களையும், தமிழ் படங்களையும் சென்ஸார் திரையிட அனுமதிக்கிறார்கள். அத்தகைய படங்களைப் பார்ப்பதால் சிறுவர்களின் மனம் தீய வழிகளில் நடக்கத் துணிந்து விடுகிறது. உதாரணமாக, "பேத்திங் பியூட்டி", "லவ்ஸ் ஆப் கார்மன்", "சைன் ஆப் தி கிராஸ்" போன்ற ஆங்கிலப் படங்களைப் பார்த்த சிறுவர்கள் கெட்டுப்போக மாட்டார்கள் என்று சொல்ல முடியுமா? ஆங்கிலப் படங்களைப் பார்த்து நம்முடைய தமிழ்ப் பட முதலாளிகளும் அத்தகைய ஆபாசங்கள் நிறைந்த படங்களைத் தயாரிக்க முற்பட்டிருக்கின்றனர். இத்தகைய படங்களை சென்ஸார் அவசியம் தாட்சிண்யம் இல்லாமல் தடை செய்ய வேண்டும். இதை சென்ஸார் கவனிக்குமா?

சி. கே. நடராஜன்
கோவை.

குறைந்த விலை! நல்ல ரகம்!
எல்லாவித பட்டு, மில் ஜவுளிகளும் எம்மிடம் கிடைக்கும்

ஜெயின் சில்க் ஸ்டோர்
62-C, அடையாறு பிரிட்ஜ் ரோடு,
அடையாறு :: சென்னை-20.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

விளம்பர ஸ்லைடுகள்

பகல் முழுவதும் வேலைசெய்து அலுத்த பின் சற்று நிம்மதியாக உட்கார்ந்து உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காக மக்கள் சினிமாவிற்குப் போகிறார்கள். அங்கு காட்டப்படும் படம் இன்னதென்று முன்னதாகவே தெரிந்து கொண்ட பின்பே அவர்கள் அப்படத்தைப் பார்க்கச் செல்வதால் படம் எப்படியிருந்தாலும் ஒருவரையும் குறை கூறுவதற்கில்லை. ஆனால் காட்சியின் நடுவே காட்டப்படும் 'ஸ்லைடு' விளம்பரங்கள் தான் வெறுக்கத் தக்கதாய் இருக்கின்றன.

பொதுவாக, இடைவேளைகளில் விளம்பர ஸ்லைடுகள் காட்டுகிறார்களே இது மிகவும் குற்றமானது. இடைவேளைக்கு முன் கதையில் ஒரு பகுதியைப் பார்த்துவிட்டு அடுத்தாற்போல் என்ன நடக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்களின் ஆவலை இவை கெடுக்கின்றன. இந்த விளம்பரக் கூத்துக்களையெல்லாம் படம் ஆரம்பமாவதற்கு பதினைந்து நிமிஷங்களுக்கு முன்பே வைத்துக் கொண்டால் படம்பார்ப்பவர்களுக்கு முன் நன்மையாக இருக்கும். அதோடு சில நிமிஷங்கள் தாமதித்து வருபவர்களும் பிரதம படத்தை ஆரம்பத்திலிருந்தே பார்க்க இயலும்.

எஸ். சேதுராமன்,
சின்னமனூர்.

இதுவா நாகரீகம் ?

நாகரீக உலகிலே சினிமாக் கலை ஒரு முக்கிய சாதனமாயிருந்துவருகிறது. ஆனால் தற்போது இச்சினிமாக்கலை மிகவும் சீரழிந்த நிலையிலிருந்து வருகிறது. இதற்கு காரணம், நம் பட முதலாளிகள் வசூலைக் கருதி நடிகைகளுக்கு அரை நிர்வாண உடை உடுத்தியும், அங்கங்கள் பூரிப்பாகத் தெரியும்படிச் செய்தும் படம் எடுக்கிறார்கள். இவர்கள் வசூலைக் கருதி இவ்வாறு செய்யும் காரியம் மக்கள் இனத்திற்கே ஒரு அருவருப்பை உண்டாக்குகிறது. மேலும் நடிகைகள் இவைகளுக்கு உடன்பட்டு நடிப்பது பெண் இனத்திற்கே சகிக்க முடியாத ஒரு அவமானம். படங்கள் தோல்வியாக முடிவதற்கும் இக்காட்சிகளையே காரணமாகவும் கூறலாம். இவ்விதப் படங்களை பொது மக்கள் பார்ப்பதால் ஒழுக்கம் கெடுவதோடு மனதையும் வெவ்வேறான கெட்ட வழிகளில் செல்ல விடுகிறார்கள். இன்னும் இதுபோன்ற கெடுதல்கள் பல. நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு இவ்வாறு அரை நிர்வாண உடை உடுத்



ஆங்கில மொழிபெயர்ப்புப் படமான "நீலக் கடல்" இப்பொழுது சென்னையிலும் வெளியூர்களிலும் காண்பிக்கப்படுகிறது.

...திக்கொண்டு நடிப்பது சிறிதும் பொருத்தமில்லாத கார்யமாகும்.

எம். கோவிந்தன்
சேலம்.

செய்வார்களா ?

செய்திப் படங்களைக் காட்டுவதன் மூலம் பொது மக்களின் அறிவு அபிவிருத்தியாகும் என்றே எல்லோராலும் எண்ணப்படுகிறது. ஆனால் செய்திப் படங்கள் காண்பிப்பதில் சில குறைகள் இருக்கின்றன. பார்ப்பவர் நமது நாட்டினராயிருப்பர். சென்னையில் சில வாரங்களுக்குமுன் என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆனால் வடநாட்டில் அணைத் திட்டம் போடப்பட்டது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அப்படத்திற்கு வியாக்யானமோ நம் பாமர மக்கள் படித்தறியாத ஹிந்தியில்தான் இருக்கும்? இதனால். நான் ஹிந்தியை நிந்திக்கிறேன் என்றெண்ண வேண்டாம். ஹிந்தி எல்லோரும் இனி மேல் கற்கவேண்டிய இன்றியமையாத பாஷை. எனினும், அது இப்பொழுது தானே ஏற்பட்டுள்ளது. அதற்குள் ஹிந்தியில் செய்தி கூறுவதினால், "ஏதோ படம் நகருகிறது. காசும் கரியாகிறது" என்ற எண்ணந்தான் பார்க்கின்ற பாமர மக்கள் எல்லோர் எண்ணத்திலும் ஏற்படும். ஹிந்தி பேசப்படும் இடங்களில் செய்திப் படங்களை ஹிந்தியில் காண்பிக்கலாம். ஆனால் ஹிந்தியை அறியாத இடங்களில் ஹிந்தி மூலம் படம் காட்டுவது, ஆங்கிலம் படித்தறியாதவனுக்கு ஆங்கிலத்தில் கடிதம் வரைவது போலத்தான் இருக்கும். ஆனால் எல்லாச் செய்திப் படங்களும் இப்படி இல்லை. சில செய்திப் படங்கள் மட்டுமே இப்படி. இன்னும் சில காலத்திற்கு முக்கால் பாகம் ஹிந்தி கற்றுக் கொள்ளும் வரை தமிழ் நாட்டவர்க்குத் தமிழிலேயே செய்திப் படங்களைக் காட்டும்படி செய்திப்பட இலாகாவினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பழ. விவேகானந்தன்
ஆவனிப்பட்டி.

உங்களுக்கு அறிமுகமான

மதராஸ் பென்ஸில் பேக்டரி

சிறந்த பென்ஸில் தயாரிப்பவர்கள்

•

ஹோ & கம்பெனி

அச்சுத் தொழிலில் வெகு காலமாக
பெயரும், புகழும் படைத்தவர்கள்

•

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

உயர்தர ஸ்டேஷனரி,
& புத்தக வியாபாரிகள்

5, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,
மதராஸ்-1

பிராயச்சித்தம்

கு.ப.சேது அம்மாள்

கார் வந்து வாசலில் நின்றது. வெளி வாராந்தாவில் தயாராக இருந்த பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டுபோய் காரில் ஏற்றினான் தர்வான்.

“கற்பகம்!... கற்பகம்!... சீக்கிரம்!...”

கண்களைத் துடைத்துக் கொண்டே அங்கு வந்தாள் கற்பகம்.

விசுவம் அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, “அசடாக இருக்கிறாயே ..” என்றான்.

“ஆமாம். அசடானதினாலேதான் உங்களை...” மேலே பேச முடியாமல் கற்பகத்துக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. நீர் நிரம்பிய கண்களுடன் கணவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

விசுவத்திற்குக் கொஞ்சம் கோபம் வந்தது. இருந்தாலும் புறப்படுகிற தருணத்தில் அவளைக் கடிந்துகொள்ள அவனுக்கு மனம் வரவில்லை. பரிவு மிக்க குரலில், “உன் எண்ணமும், பயமும் ரொம்ப முட்டாள்தனமானது கற்பகம். இதை உனக்கு ஆயிரம் தடவை தெளிவுபடுத்திவிட்டேன். இப்பவும் சொல்லிவிட்டுப் போகிறேன். சங்கா கௌளிகள் பரம்பரைக்கு வாக்கு ஒன்றுதான்! நீ நினைக்கிற மாதிரி மதிமயங்கிப் படுகுழியில் விழமாட்டேன். கண்களைத் துடைத்துக்கொள். தைரியமாக, சந்தோஷமாக எனக்கு உத்தரவு கொடு” என்று கூறி அவளைத் தேற்றினான்.

தன் கையிலிருந்த விபூதியை அவன் நெற்றியிலிட்டு, “என்னவோ, அபயஹஸ்தத்தோடு அதோ உட்கார்ந்திருக்கிறானே பழனி மலையான்—அவன்தான் உங்கள்பக்கத்திலிருந்து காப்பாத்தணும். போயிட்டு வாங்கோ. வருஷப் பிறப்புக்குக் கண்டிப்பாய் ஆத்துக்கு வந்துடணும். ஆமாம்!” என்று கடைசியில் ஆக்ஞையிட்டு உத்தரவு கொடுத்தாள் கற்பகம்.

“நான்தான் வரேன்னேனே...வந்துடறேன். குழந்தையைக் கவனிச்சுக்கோ பத்திரம்...வரட்டுமா!”

மௌனமாகத் தலையசைத்தாள் கற்பகம்.

அஞ்சனா பிலிம்ஸாரின் “வாஸவதத்தா” என்ற படத்திற்கு வசனமெழுதவென்று விசுவகுமார் சென்னைக்கு வந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு அவன் படித்துக்கொண்டிருந்த சென்னையாக இப்பொழுது இல்லை!

ஒரே நாகரிக மயம். சினிமா ஸ்டைல்! தாம்பத்ய ஜோடிகளும், யுவதிகளும், நாகரிக உடைகளில் நடமாடும் காட்சி அவனை நிலைதடுமாறச் செய்தது!

கிராமத்துப் பசும்புல் வெளியில் கண்ட கற்பனையும் எழுத்தும், பட்டண வாசத்துச் சூழ்நிலையில் அவனால் காண இயலவில்லை!

போதாக் குறைக்கு படத்தின் கதாநாயகி வாஸவதத்தாவாக நடிக்க விருக்கும் பூர்ணாதேவியின் சிநேகமும் அவளுடைய தோற்றமும் அவனைப் பித்தனாக்கி விட்டன!

“பூர்ணா! நீதான் அந்த பாரதி வர்ணித்த புதுமைப் பெண்! அழகு, குணம், படிப்பு, ஆராய்ச்சி, சுயநல தியாகம்—இவ்வளவும் உன் பெயரின் அழகுக்கு அழகு செய்கின்றன! உன்னுடன் பேசுவதே மனிதன் கற்கவேண்டிய ஒரு கலை!

“கற்பகமும் இருக்கிறாளே—ஒரு பெண் என்று: ஒரு நாளாவது, சிரிப்பும் விளையாட்டும், ஸல்லாபமுமாக இருந்ததுண்டா அவளுடன்? பொழுது விடிந்ததிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் சமையலறையில் தான் அவளைப் பார்க்கலாம்! சை!” இந்த மாதிரி எண்ணங்கள் அவனைத் துருவின!

கற்பகத்தையும், பூர்ணாவையும் மறுபடி மறுபடி ஒத்திட்டுப் பார்த்தது அவன் உள்ளம்.

பாவம்! கிராமியப் பண்பில் வளர்ந்த கற்பகத்திற்குக் காதலைப்

பற்றி என்ன தெரியும்? 'தானடங்க தன் குலமடங்க' என்று, மட்டு மரியாதையாக, கணவனையே தெய்வமாக மதித்து உபசரிக்கவும், போர்த்தின முதுகு திறக்காமலும், குனிந்த தலை நிமிராமலும் சாதுவாய் இருப்பாள்! இதுதான், கற்பகத்திற்கு அவளுடைய பாட்டி சொல்லிக் கொடுத்த நாகரிகம்!

இந்த நாகரிகம், கிராமத்திலே இருந்த போது விசுவத்திற்கும் நியாயமாகவே தான் பட்டது!

பட்டணம் வந்து, படக் கதை எழுத காதலையும் கலையையும் வர்ணிக்க முயன்று, சுபாவமே நடிப்போ, என்று மலைக்கக்கூடிய சாதுரியக்காரியான பூர்ணுவின் கண்விச்சும், பேச்சும் இடையிடையில் மோத, தெருவிலும், 'செட்'டிலும் காணும் யுவதிகளுடைய நவநாகரிக அலங்காரங்களும் அவனுடைய உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிவிட்டன.

இவற்றிற்கு முன், வீட்டைவிட்டு புறப்படும் சமயம மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதியும், நாணயமும் காற்றில் பறந்தோடின! இப்பொழுது பழைய விசுவமல்ல அவன்!



நாளாக ஆக, பூர்ணாவின் சிநேகம் காதலாகக் கனிய ஆரம்பித்தது. வசன கர்த்தா விசுவ குமாரும், ஹிரோயின் பூர்ணா தேவியும் இன்ப சிகரத்தில் உலவும் பருவம் இது!

மற்றுமிரண்டு மாதங்கள் உருண்டன.

மணி பதினொன்று! தோளில் தோற்பை ஊசலாட, விசுவகுமார் இருந்த அறையின் கதவுப் புறமிருந்த திரையைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் பூர்ணா தேவி.

சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தான் குமார்.

பூர்ணா அதைப் பிடுங்கி விசியெறிந்து விட்டு, முறைப்புடன், "மறுமுறை சிகரெட்டுடன் உங்களைப் பார்த்தேன்..."

"ஊ! என்ன செய்து விடுவாய்?"

"அது அப்புறம் தெரிகிறது...சட்! என்ன நாற்றம்!... சை!"

"சட், சீ, தூ! என்று கொண்டு இதென்ன வேண்டியிருக்கிறது? எட்டப் போய் உட்காரேன்!"

"சொல்ல மாட்டீர்களா என்ன......? இதென்னது கடிதம் சுக்கு நூறாகிக்கிடக்கிறதே!..." என்று அந்தத் துண்டுகளையெல்லாம் பொறுக்கினாள் பூர்ணா.

"இதோ பார்—இங்கே ஒரு துண்டு கிடக்கிறது; எல்லாவற்றையும் பொறுக்கி, பிணைத்துப் படி!"

"படிக்கத்தான் போகிறேன்" என்று அனைத்தையும் சிரமப்பட்டு ஜோடித்துப் படித்தாள் பூர்ணா.

திக்கென்றது அவளுக்கு. ஒரு தடவைக்கு நாலு தடவையாகப் படித்துப் பார்த்தாள். மின்வெட்டைப்போல பழைய நினைவொன்று அவள் மனவெளியில் பளிச்சிட்டது!

"ஊஹும், நாடகக்காரி என்றால் அவ்வளவு ஏளனமாடீ உனக்கு! அவள் நகத்தழகு காணுவாயா நீ?" என்ற இடிக்குரல் இப்பொழுதுதான் உறுமுவது போல பிரமை ஏற்பட்டது அவளுக்கு!

பூர்ணாவின் மருட்சியையும் முக விகாரத்தையும் கண்டு மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தான் விசுவம்.

பூர்ணாவின் நினைவு அவள் கணவனுடன் குடும்பம் நடத்திய காலத்திற்குச் சென்று கொந்தளித்தது.

அழகின் ஆலயமாகவும், அறிவின் உறைவிடமாகவும் இருந்து, கணவனிடம் பரிபூரண அன்பு வைத்து அவனை ஆராதித்ததற்கு அவன் அவளிடம் காண்பித்த அருமை அது!

தனது தகைமைக்குச் சிறிதும் ஒவ்வாத கணவனாக இருந்தும், தனது நாதன் என்ற மகத்துவத்திற்குப் பணிந்து கால்களைப் பற்றிக் கொண்டு மன்றாடிய பொழுது—தாலி கட்டிய மனைவியை உதைத்துத் தள்ளிவிட்டு ஓடிய கிராதகனிடம் இருப்பதா இன்னும்?

வாழ்வா அது? இனி அவன் என் கணவனல்ல; சத்துரு.

சத்துருவைப் பழி தீர்க்க வேண்டும், வஞ்சம் தீர்க்க வேண்டும். தீர்த்தே ஆக வேண்டும். அதற்காக நான் எந்த நரகத்தில் விழவேண்டுமாயினும் தயார் என்றேன்.

இதோ!...பழி தீர்த்து விட்டேன். ஆனால்......ஐயோ......ஆம்...இன்னும் சாவகாசம் இருக்கிறது......பிராயச்சித்தம் செய்ய......."

உதறிக்கொண்டு எழுந்து, வராந்தா ஓரம் வந்து, "ஸலாம்!" என்று கூப்பிட்டாள்.

காரில் உட்கார்ந்திருந்த டிரைவர் எழுந்து பூர்ணாவின் முன்பு வந்து நின்றான்.

"தஞ்சாவூருக்குப் போகவேண்டும். பெட்ரோல் இருக்கிறதா, வண்டியில்?"

"கொஞ்சம் வேண்டியிருக்கும்."

"உங்களிடம் இருக்கிறதா குமார்?"

இருக்கிறது என்ற அர்த்தத்தில் தலையை அசைத்தான் குமார்.

"வேண்டியதை எடுத்துக் கொள்" என்று டிரைவருக்குக் கூறிவிட்டு, விசுவத்தின் பக்கம் திரும்பி, "புறப்படுங்கள், குமார்!" என்றாள்.

"எங்கே?"

"இறங்கும் போது தெரிகிறது" என்றாள் பூர்ணா.

குமாரையும் பூர்ணாவையும் ஏற்றிக் கொண்டு கார் தஞ்சாவூரை நோக்கிப் பறந்தது.

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

வி. சுசீலா

"ஞானசௌந்தரி"யை நமக்களித்த ஸிடாடல் பிலிம்ஸார் சீக்கிரமே "இதய கீத"த்தை வெளியிடப் போகிறார்கள். அதில் ஒரு முக்கிய வேஷத்தில் தோன்றுகிறார் வி. சுசிலா.

நடனம் ஆடினர்

JL
NWM/A47
1820/3/9

பழங் காலத்திய சங்கீத வித்வான்களில் சிலர், மற்றைய ராகங்களை விட ஏதாவது ஒரு குறிப்பிட்ட ராகத்தில் விசேஷ ஞானம் பெற்றிருப்பார்கள். அந்த ராகத்தை அவர் பாடி, நாள்கணக்காகக் கேட்டுக் கொண்டிருந்தாலும், சலிப்பேற்படாது. நடிப்பில்கூட சோகரஸத்திற் கென்றே சிலரும், ஸ்ருங்காரத்திற்கென்றே சிலரும், இப்படி ஒவ்வொரு தினுசான ரஸங்களை முக்கியமாகக் கொண்ட பாத்திரங்களை நடிப்பதில், ஒவ்வொருவர் நடிப்பு மிக்வும் பொருத்தமாக அமைந்து விடுகிறது இதைப் போலவே நடனத்திலும் சிலர், ஏதாவது ஒரு ரஸபாவத்தை வெளிப்படுத்துவதில் விசேஷத் திறமை பெற்றிருக்கிறார்கள்.

உதாரணமாக, இந்திய நுண்கலை கழகத்தின் ஆதரவில் மே மாதம் 21-ந் தேதியன்று கோகலே மண்டபத்தில் நடனம் செய்த குமாரி வனஜாவின் கச்சேரியில் (பதாபி நயங்களில்) வருத்தம் கலந்த ஏக்கமே அதிகமாகக் காணப்பட்டது. "எங்கும் நிறைந் தாயே" என்ற பாட்டுக்கு அபிநயம் வெகு அற்புதமாக அமைந்திருந்தது. மற்ற பதங்களில் அவ்வளவாக விறுவிறுப்புக் காணப்படவில்லை. "நடனமாடினார்" என்ற பாட்டில் ஜதிகள் வெகு வேகமாக அமைக்கப் பெற்று, தாள சுத்தத்துடன் ஆடப்பட்டது. இதில் ஒவ்வொரு தடவையும் நடராஜர் நிலையில் நிற்கும்போது, அதிக நேரத்தை செலவிடாமல் இருந்திருக்கலாம். நடராஜர் நிலையைப் பூரண சுத்தமாகச் செய்வதே கடினம். அதைத் தப்பிதமாகச் செய்து, அந்த நிலையையும் அதிக நேரம் காட்டினால் தப்பிதம் நன்றாகத் தெரிகிறது.

சபைப் பக்கமாக புறம் காட்டி உட்கார்ந்து கைகளை வீசி உடலைத் திருப்பிய அசைவுக் கோப்புகளில் வேகம் வேண்டும். முக்கியமாக, இதைப் போன்ற (சபையோர் பக்கம் புறம் திரும்பிச் செய்யும்) அசைவுகளில் நிதானம் காட்டுவது அவ்வளவாக நன்றாயில்லை. மற்றபடி ஆங்கிகம் சுத்தமாக அமைந்திருந்தது. "கௌரீ நாயகா" என்று விருத்தத்தை ஆரம்பித்துப் பாடுகையில், நிலையும், அபிநயமும் பல்லவர் காலத்திய சிலைகளில் காணப்படும் அழகைப்போன்று, சாஸ்திரீய மணம் கமழ்ந்திருந்தது. ஆலைப்பாட்டின்பின்பாதியில், இசைக் கோப்புகள் ஒரே மாதிரியாக அமைந்து, "கதக்" நடனத்தை ஞாபகப்படுத்தும் ஜதிகளுடன் அமைந்திருந்தது.

இடுப்பின்மீது கைகளை ஊன்றி நிற்கவேண்டி வரும் சமயங்களில் ஒரு கையை இடுப்பின் மீதும், மற்றொன்றை வயிற்றின் மீதுமாக (சில சமயங்களில்) வைத்தது, சோர்வு மிகுந்து களைத்திருப்பது போன்றிருந்தது. இரு கைகளையும் சமமாக இடுப்பின் மீது வைத்தால் (உடற்கட்டின் அழகினால்) கைதேர்ந்த சிற்பியின் கற்பனையால் உருவப்பெற்ற சிலையே உயிர்பெற்று வந்து நிற்பதைப் போன்றிருக்கும். இதைப்போன்ற இரண்டொரு குறைகளை சிரத்தையுடன் கவ

கெம்பராஜும், ராஜம்மாவும், தோன்றும் இக் காதல் காட்சியை "ராஜா விக்ரமா" தமிழ்படத்தில் காணலாம்.

134125

னித்துத் திருத்திக்கொள்ளவேண்டும், குமாரி வனஜாவிடம் இக்காலத்திய திறமை வாய்ந்த (நடன) நடிகளில் ஒருவராக விளங்குவதற்கு வேண்டிய மற்ற அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன.

குமாரி வனஜாவின் சகோதரர் ராகவன் என்பவர் அன்று நட்டுவாங்கம் செய்தார். தாளத்தைக் கொட்டுவது, நடியின் பாத ஜதிகளை தாள சுத்தத்திலிருந்து பிறழாமல் பாதுகாத்து, கட்டுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் பழைய காலங்களில் இவரை "சூக்ரகாரி" என அழைத்தனர். ஆனால் அன்றைய பதங்களில் தாளம் (கோவில்களில் பஜனை செய்வதுபோல்) பாட்டுக்காகப் போடுவது போன்றே காணப்பட்டது. பதங்களில் சிலவற்றை பாடிய லக்ஷ்மியின் குரல் இனிமையையும், உணர்ச்சியோடு பாடியதையும் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

• • •

தனி நடனக் கச்சேரிகளில் பதாபிநயங்களின் ரஸபாவ அழகைவிட, நாட்டிய (நாடக)த்தில் நடிகள் கதா பாத்திரங்களாக நடிக்கும்போது, பாத்திரங்களுடன் ஒன்றிவிடுவதால், ரஸபாவங்கள் விசேஷமாக காணப்படுகின்றன. ரஸிக ரஞ்சனி சபா மண்டபத்தில் இம்மாதம் 3, 4, தேதிகளில், மங்களம் கோஷ்டியாரால் நடிக்கப்பெற்ற சிற்றம்பலக் குறவஞ்சி நாட்டியத்திலும், மற்றை அம்சங்களைவிட ரஸபாவங்கள் விசேஷமாக அமைந்திருந்தன.

ஈஸ்வரனாக கலாசந்திராவும், வஸந்தவல்லியாக மங்களமும், குறத்தியாக கே. வி. ஜெயலக்ஷ்மியும் நடித்தனர். மங்களம் பங்கெடுத்துக் கொள்ளும் கச்சேரிகளில் ஒவ்வொன்றும் முந்தியதைவிட "தரம்" குறைந்தே காணப்படுகின்றன. "உள்ளம் உருகுதடி", "வெண்ணிலா" முதலிய சில

கே. வி. ஜெயலக்ஷ்மி

பாட்டுகளுக்கு அபிநயம் பிடித்தது அழகாயிருந்தது. "கருணை நீ செய்ய" என்ற வர்ணத்தில் ஜதிகளை குறைத்திருந்தும், அடவுகள் ஆங்காங்கே (தீர்மானங்களின் போது) தாளத்துடன் ஒற்றுமையில்லாதிருந்தன. "ஆடிய பாதத்தை", "எப்போ வருவாரோ?", "வர்ணம்", இவைகளில் ஒரே மாதிரியான நிலைகளை (போஸ்களை) அடிக்கடி புகுத்தியிருந்தது விறுவிறுப்பைக் குறைக்க ஒரு காரணமாக விளங்கிற்று.

"மங்கை என்முன்" என்ற பாட்டில் மன்மதனைக் குறிக்க, சிகர ஹம்ஸாஸ்யக் கைகளை காட்டிய பின்னர் அமைத்திருந்த கையசைவில் லாகவமே இல்லாமலிருந்தது. நடனம் உழைப்பிற்கேற்ற பலனைத்தானளிக்கும். ரஸிகர்களின் அபிமானத்தைப் பெற்றுவிட்டபின் சாதகம் அவ்வளவு அவசியமில்லை என்று கருதாமல், ஜதிகளை அடிக்கடி அப்யஸித்து வந்தால் இந்தக் குறைகளை நீக்குவது சிரமமாயிராது.

வஸந்த வல்லியின் தோழிகளாக நடித்த ஹம்ஸா, வஸந்தா, சீதாலக்ஷ்மி, சுகுந்தலா முதலியவர்கள் தாள சுத்தத்துடன் ஆடியும், இரண்டொரு இடங்களில், அவர்களின் அசைவுகளில் ஒற்றுமையில்லை. கலா சந்திரா தன்னுடைய பாகம் வரை நன்றாகவே ஆடினார்.

குறத்தியாக நடித்த கே. வி. ஜெயலக்ஷ்மி கிராம்மிய நடனத்தை வெகு சுத்தமாக ஆடினார். மற்றவர்களின் ஆட்டத்தைவிட ஜெயலக்ஷ்மியின் நடனம்தான் அன்று கவர்ச்சிகரமாய் அமைந்திருந்தது. ஜதிக் கோப்புகளும், சிக்கலான (ஆனால் அழகான) அசைவுகளை உண்டாக்கும் வகையில் அமைந்திருந்தது விசேஷ அம்சம். அந்தசிக்கலான ஜதிகளை தாளக் கட்டோடும், துள்ளிய அசைவுகளோலாசவத்துடனும் ஆடி, ரஸிகர்களிடையே ஒரு விறுவிறுப்பை உண்டாக்கிவிட்டார் ஜெயலக்ஷ்மி. ஆனால் அவரது முக அலங்காரம் சோபிதமாகக் காணப்படவில்லை. சரஸாவும், கே. வி. ஜானகியும் தங்களது இனிய சாரீரத்தால் கச்சேரியை மேலும் சோபிக்கச் செய்தனர். ஜெயலக்ஷ்மி தனக்கும் நன்றாகப் பாடத் தெரியும் என்பதை 4-ம் தேதி கச்சேரியன்று விநாயகர் துதியைப் பாடி நிரூபித்து விட்டார்.

கே. என். தண்டாயுதபாணி பிள்ளையால் தொகுத்து நடத்தப்பட்ட இந்தக் குறவஞ்சி நாட்டியம், ஒவ்வொரு கச்சேரியிலும் சில மாறுதல்களை அனுபவிக்கின்றன. வர்ணத்தின் நீளத்தைக் குறைத்திருப்பது, பிரம்மா-சரஸ்வதி காட்சிகளை நீக்கியிருப்பது, இது போன்ற மாறுதல்களால் கதையின் போக்கு மாறுவதுடன், அழகும் குறைந்து காணப்படுகிறது. மற்றபடி சிவதாண்டவம், குறத்தி நடனம், முதலியவைகளில் ஜதிக் கோப்புகளை நன்றாக அமைத்திருந்தார்.

—"நந்தி"

உல்லாச யாத்திரை.....

நாடு நகரங்களை சுற்றிப் பார்த்துப் பிரயாண இன்பத்தைப் பெறுவது நாகரீக வாழ்வின் சிறப்பான அம்சம்.

ஆனால்......

தங்கியிருக்க வசதியான விடுதிகள், ரயிலுக்கோ, பஸ்ஸுக்கோ கூப்பிடு தூரத்தில் உள்ளதாக அமைந்து, எந்தவிதமான தேவைக்கும் வெளியே அலைய அவசியமில்லாமல் இருந்தால் அன்றே உல்லாச யாத்திரை இனிமையாக இருக்கும்!

இதோ, திருச்சி ஜங்ஷன் அருகாமையில் அத்தகைய உன்னதமான விடுதி உங்களை அன்புடன் வரவேற்கிறது.

அசோக் பவன்

ஸ்பென்ஸர் ஷோ ரூம் எதிரில்

ஜங்ஷன் ரோடு ★ ● ★ திருச்சிராப்பள்ளி

N. A. A.

பிரம்ம லோகம்

ஔவையார்

கே. பி. சுந்தராம்பாள் நடிக்கும் இன்டொரு காட்சிகளே பாக்கியாக உள்ளதாம். அதுவும் தயாராகி விட்டால் ஜெமினியிலிருந்து "ஔவையார்" வெளிக் கிளம்பிவிடுமாம். கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்ஷனில் தயாராகி வரும் படம் இது.

சௌதாமினி

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் 'சௌதாமினி' ஜெமினி ஸ்டுடியோவில் உருவாகி வருகிறது. கே. நாகபூஷணம் டைரெக்ஷனில் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் இப்படம் தயாராகி வருகிறது. கண்ணாம்பா, எம். கே. ராதா, டி. ஆர். ராமச்சந்திரன் பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது.

லாவண்யா

ஈஸ்டர்ன் ஆர்ட் ப்ரொடக்ஷன்ஸ் "லாவண்யா" பாதிக்கு மேல் தயாராகி விட்டதாம். ஜி. ஆர். லக்ஷ்மணன் டைரெக்ஷனில் வாஹினி ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது இப் படம். டி. இ. வரதன்—சூர்யப் பிரபா சம்பந்தப்பட்ட காதல் கட்டம் ஒன்று சமீபத்தில் காமிராவுக்குள் புகுந்து கொண்டதாம், மற்றும் இப் படத்தில் குமாரி கமலா, குமாரி வனஜா, புளிமூட்டை முதலியோர் நடிக்கின்றனர். சங்கீத டைரெக்டர் எஸ். வி. வெங்கட்ராமன் பல அருமையான மெட்டுகளை இப்படத்தில் புகுத்தியிருக்கிறாராம்.

பாரிஜாதம்

லாவண்யாவின் "பாரிஜாதம்" ஆகஸ்ட் மாதத்தில் திரையிடப்பட்டு விடுமாம். நல்ல உழைப்பாளியான என். நரசிம்மனின் உதவியுடன் கே. எஸ். கோபால கிருஷ்ணன் படத்தை சிறந்த முறையில் தயாரித்து வருகிறாராம். மஹாலிங்கம், ராஜம்மா, பி. எஸ், சரோஜா, மஹாதேவன் முக்கிய பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது.

ஓர் இரவு

ஏவி. எம் ஸ்டுடியோவின் "ஓர் இரவு" அவர்கள் ஸ்டுடியோவில் வெகு ஜரூராகத் தயாராகி வருகிறது. கதாநாயகியைத் தனக்கு மணம் செய்து கொடுக்கும்படி வில்லன், கதாநாயகியின் தந்தையிடம் கேட்கிறான். தந்தைக்கு வில்லனிடம் பயம் ஒரு புறமும், மகளிடம் பாசம் ஒரு புறமுமாக தவிக்கிறார். இந்தக் கட்டம் ப. நீலகண்டனின் டைரெக்ஷனில் சமீபத்தில் படமாகியது. வில்லனாக பாலய்யாவும், கதாநாயகியாக பி. கே. சரஸ்வதியும், அவளது தந்தையாக டி. கே. ஷண்முகமும் நடிக்கின்றனர்.

இதய கீதம்

ஸிடாடலின் "இதய கீதம்" முடிவடைய இன்னும் ஒரே ஒரு காட்சி தான் மிகுதி இருக்கிறதாம். அதுவும் இம் மாத முடிவுக்குள் தயாராகி, படம் ஜூலை மாதத்தில் வெளியிடப்படுமாம். ஜோஸப் தளியத் டைரெக்ஷனில், ஸதர்ன் ஸ்டுடியோவில் உருவாகி வரும் இப்படத்தில் மஹாலிங்கம், ராஜகுமாரி, சாரங்கபாணி முக்கிய பாகங்களில் நடிக்கின்றனர். லலிதா–பத்மினியின் கவர்ச்சிகரமான ஒரு நடனமும் இருக்கிறது.

மச்சரேகை

ஜூலை மாத இறுதியில் காட்சிக்குத் தயாராகி விடக்கூடிய படங்களில் சுகுமாரின் "மச்சரேகை" யும் ஒன்றாக இருக்குமாம். எஸ். வரலக்ஷ்மி, மஹாலிங்கம் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் கிருஷ்ணன், மதுரம் ஹாஸ்யமும் சேர்க்கப்படலாமென்று தெரிகிறது.

உண்மையின் வெற்றி

டெஸ்பி பிலிம்ஸ் "உண்மையின் வெற்றி" படப்பிடிப்பு முடிவடைந்து நகாஸ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஹரிபாய் தேசாய் டைரெக்ஷனில் தயாராகியுள்ள இப்படத்தில் டி. ஏ. ஜெயலக்ஷ்மி, மேனகா, பிரதம பாகங்களில் நடித்திருக்கின்றனர்.

மந்திரி குமாரி

மாடர்ன் தியேட்டர்ஸ் "மந்திரி குமாரி" ஜூன் மாதம் 24ந் தேதி வெளிவரும். அதைச் சிறந்த முறையில் திரையிட (மாஜி ஜுபிடர்) ஸ்ரீனிவாஸன் நூதனமான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறாராம். மாதுரிதேவி, நம்பியார், எஸ். நடராஜன், எம். ஜி. ராமச்சந்திரன் முதலியவர்கள் பிரதம பாகங்களில் நடித்துள்ள இப்படத்தில் லலிதா–பத்மினி–ராஜனி ரஞ்சகமான நடன விருந்து இருக்கிறதாம். டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் இப்படத்தை வெட்டி ஒட்டும் வேலையில் முனைந்திருக்கிறாராம்.

காமெடியன் நாராயண ராவ்

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

சகோதரர்கள்'' (தமிழ் – தெலுங்கு), ஆகிய படங்களில் அவர், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு நடித்திருக்கிறார், அவரைப பொருத்த வரையில், தமக்கு அளிக்கப்படும் பாத்திரம் சின்னதாஞலும், பெரியதாஞலும் கச்சிதமாக நடித்துவிடுவது குறிப்பிடத்தக்கது. அவர் தற்போது ஜெமினியின் "ஒளவையார்", "வீரகுமார்" (தமிழ்–தெலுங்கு) ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

நாராயண ராவ் சுமார் எட்டு வருஷ காலமாக ஜெமினியில் ஒரு நிரந்தர நடிகராக சம்பளம் பெற்றுவருகிறார். ஆகவே இனிவரும் ஜெமினி படங்களிலும் அவரைக் காணலாம்.

* * *

தற்போது சென்னை வாசியாக விளங்கும் நாராயண ராவின் சொந்த ஊர் சின்ன தாராபுரம் ஆநம் மாத்வ பிராமண ஜாதியில் பிறந்த அவரது தாய் பாஷை கன்னடம். ஆனால் பள்ளியில் படித்ததெல்லாம் தமிழில்தான். அவருக்கு இவ்விரு பாஷைகள்தான் தெரியும். அவரது தகப்பனுரான ஸ்ரீ. லக்ஷ்மீ நாராயண தாஸர் கதை, உபந்யாசம், முதலியவைகளைச் செய்து வந்தார். நாராயண ராவுக்கு மூன்று தம்பிகள் மட்டுமே கூடப் பிறந்தவர்கள்.

நாராயண ராவுக்கு தற்போது 54 வயது ஆகிறது. அவர் 1896-ம் வருஷம், மார்ச் மாதம் 21-ந் தேதி சனிக்கிழமையன்று பிறந்தவர். அவர் உபாத்தியாயர் உத்தியோகம் பார்த்து வந்தபோது (1915-ல்) திருமணம் நடந்தேறியது. அவருக்கு இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களும் பிறந்துள்ளனர். மூத்த பெண்ணிற்கு மட்டும் சில வருஷங்களுக்கு முன்பு விவாஹமாகி விட்டது. பையன்கள் இருவரும் படித்து வருகின்றனர்.

சாதுவாக தோற்றமளிக்கும் நாராயண ராவ் சுமார் ஐந்தடி உயரமும், மாநிறமும் உடையவர். படாடோபமாக ஆடை அணிந்து கொள்ளுவதும், பணச் செலவு செய்வதும் அவருக்குப் பிடிக்காது. சர்வ சாதாரணமான துணியில் தைத்த ஒரு ஷர்ட்டுடன், அடக்க ஒடுக்கமுள்ள கர்னடக மனிதராய் காணப்படும் அவரைப் பார்க்கும்போது, "இந்தப் பூனையும் அந்தப் பாலைக் குடிக்குமா?" என்றே எண்ணும்படியிருக்கும். அவர் எல்லோருடனும் கர்வமின்றிப் பழகுவார்; யாருடனும் விரோதம் ஏற்படுத்திக் கொள்ள விரும்ப மாட்டார். உன்னைக் கொண்டு திருப்தியடையும் சுபாவத்தையும் அவரிடம் காணலாம்.

தற்போதைய தமிழ் ஹாஸ்ய நடிகர்கள் அனைவரிலும் நாராயண ராவே அநுபவத்தில் மூத்தவர். அவர் சினிமாவில் நடிக்கத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை—சென்ற 16 வருஷ காலமாக இடைவிடாமல் படங்களில் நடித்து வருகிறார். இன்னமும் அவரது நடிப்பில் ரஸிகர்கள் சலிப்புறவில்லை. மேலும், அவர் எத்தனை படங்களில் நடித்தாலும் பார்க்கத் தயாராய் இருக்கிறார்கள் ரஸிகர்கள். அவர் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

இது செய்தி

நியூடோனில் தீ விபத்து

சென்ற மாதம் 21-ம் தேதி சென்னை நியூடோன் ஸ்டுடியோவில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. சீக்கிரமே தீ அணைக்கும் படையினர் தீயை அணைத்து விட்டார்கள். இந்த விபத்தினால் சில துண்டுப் படங்களும், பழைய மோட்டார் டயர்கள் சிலவும் சேதமடைந்தனவாம்.

இனாம் டிக்கெட்

பம்பாய் மாகாண சர்க்கார், 'தமாஷா வரிச் சட்டத்தின்' கீழ்—இனாம் டிக்கெட் கொடுக்கும் விஷயமாக புதிதாய் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். கொட்டகையில் மொத்தம் உட்காரக் கூடிய ஜனத் தொகையில், ஐந்து சத விகிதம் அல்லது பத்து சத விகிதம், இது இரண்டில் எது மிகவும் குறைவாக உள்ளதோ அவ்வளவுதான் இலவச டிக்கெட் வழங்கலாம் என்று இவ்வுத்தரவு கூறுகிறது.

படத்திற்குத் தடை

கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா ஆகிய நான்கு ஜில்லாக்களில் எங்குமே திரையிடக் கூடாதென, "வாரியர் ஆப் ரஷ்யா", "டிரயம்ப்-ஆப்-யூத்", ஆகிய இரண்டு ரஷ்ய படங்கள்மீதும் சென்னை சர்க்கார் தடை விதித்துள்ளனர்.

'இரும்புத் திரை'க்கு எதிர்ப்பு

சென்ற மாத மத்தியில் சென்னை க்ளோப் தியேட்டரில் "இரும்புத் திரை" என்ற படம் நடைபெற்றது. அது சோவியத் கொள்கையை எதிர்க்கும் படம் என்று கூறி, அதை பகிஷ்கரிக்கும்படி நோட்டீஸ் ஒட்டியதற்காக ஒருவன் கைது செய்யப்பட்டான். அந்தத் தியேட்டர் முன்பு, படம் பார்க்க வந்தவர்களை, 'அந்தப் படத்தைப் பார்க்க வேண்டாமெ'ன்று கூறி மறியல் செய்ததற்காக மூவர் கைது செய்யப்பட்டார்கள். படம் நடந்து கொண்டிருந்த சமயம் திரைமீது, மை புட்டியையும், கற்களையும் வீசியதற்காகச் சிலர் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் மாஜிஸ்டிரேட் தண்டனை விதித்திருக்கிறார்.

தியேட்டர்களுக்குப் பரிசு

சென்னை நிதி மந்திரி கனம் பி. கோபால் ரெட்டி தியேட்டர்களுக்குள் ஒரு போட்டி ஏற்படுத்தி, பரிசு அளிக்கும் திட்டம் ஒன்றைத் தாம் யோசித்து வருவதாக வெளியிட்டிருக்கிறார். ஒரு வருஷ காலத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட தியேட்டர் அதிகமான வரிப் பணத்தைக் கொடுக்கிறதோ அந்தத் தியேட்டருக்கு சர்க்கார் ஒரு பரிசை அளிக்கலாம் என்பதே அவரது திட்டம். இந்தத் திட்டத்தினால் தியேட்டர் முதலாளிகளிடையே உத்ஸாகம் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். பரிசாக தியேட்டருக்கு ஒரு நாளைக்கு தமாஷா வரி விலக்குச் செய்யலாமா, அல்லது ஷீல்ட், கோப்பை ஏதாவது பரிசு அளிக்கலாமா என்று தாம் யோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இது விஷயமாகப் பிலிம் சேம்பரின் அபிப்பிராயத்தைத் தாம் கேட்டிருப்பதாகவும் அறிவித்தார்.

தியேட்டர்காரர்களின் எதிர்ப்பு

சென்ற மாதம் 20-ம் தேதி தென்னிந்திய பிலிம் சேம்பர் கட்டிடத்தில் நகர தியேட்டர்காரர்கள் கூடி, மந்திரியின் புது யோசனையைக் குறித்துப் பேசினார்கள். அவர்கள் ஒரே முகமாக இந்த யோசனையை எதிர்த்தார்கள். இந்த திட்டம் தங்களிடையே உள்ள சிநேக பாவத்திற்கே பங்கம் விளைவிக்கக் கூடுமென்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். தவிர, வசூல் என்பது பெரும்பாலும் திரையிடப்படும் படத்தின் தரத்தையே பொருத்தது என்றும், தியேட்டர் நிர்வாகிகளின் திறமையில் ஒன்றுமில்லை என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

விகட மணி

சென்ற மாதம் 26-ம் தேதி புதுச்சேரியில் ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் 52-வது ஜயந்தி விழாக் கொண்டாடப்பட்டது. ஆர். கே. மூர்த்தியின் விகடக் கச்சேரி இவ் வைபவத்திற்குப் பெரிதும் சோபையை அளித்தது. அவருடைய கலா ஞானத்தைப் பாராட்டி, ஸ்ரீ சுத்தானந்தர் அவருக்கு "விகடமணி" என்ற பட்டத்தை அளித்தார்.

மஹாலிங்கத்தின் மீது வழக்கு

கல்லிடைக் குறிச்சியில் நாடகம் நடத்த வி. எம். கணபதியாப் பிள்ளையுடன் முன்பு நடிகர் டி. ஆர் மஹாலிங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டாராம். இதற்கு விரோதமாக, வேறு ஒருவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நாடகம் நடத்தப் போவதாகவும், அதனால் தமக்கு ரூ. 2400 நஷ்டஈடு தரவேண்டுமென்றும் கணபதியாப் பிள்ளை மஹாலிங்கத்தின் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறாராம். இந்த வழக்கு முடிவடையும் வரை மஹாலிங்கம் கல்லிடைக்குறிச்சியில் நாடகங்களை நடத்தக் கூடாதென, ஒரு இடைக்கால உத்திரவை பிறப்பிக்க வேண்டுமென கணபதியாப் பிள்ளை கொடுத்த மனுவை நீதிபதி அங்கீகரித்து உத்திரவிட்டிருக்கிறார்.

மிதக்கும் தியேட்டர்

பம்பாய் சௌபாத்தி கடற்கரையின் அருகே, இந்த வருஷம் அக்டோபர் மாதத்தில், மிதக்கும் தியேட்டர் ஒன்று திறந்து வைக்கப்படுமாம். உலகத்திலேயே இதுதான் முதல் முயற்சியாம். இந்தத் தியேட்டர் மூவாயிரம் பேர்கள் பார்க்க வசதியுள்ளதாக இருக்குமாம். தியேட்டருக்கு மேல் கூரை இருக்காது. தியேட்டருக்கு ஒரு பாலத்தின் மூலம் கடற்கரையுடன் தொடர்பு இருக்குமாம்.

பிலிம் கிடங்கில் தீ விபத்து

பழைய டில்லியில் சென்ற மாதம் 26-ம் தேதி, ஒரு பிலிம் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டது. அதன் விளைவாக 19 பிலிம் கிடங்குகள் தீக்கிரையாகிவிட்டன. சுமார் முப்பத்தைந்து லக்ஷம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம்.

சாந்தா ஆப்தேயின் ஆவல்

சென்ற மாத மத்தியில் வடநாட்டு நடிகை சாந்தா ஆப்தே கொழும்புக்குப் போயிருந்தார். அங்கு அவர் நிருபர்களிடம் தாம், ‘சாவித்திரி’ தமிழ்ப் படத்தில் நடித்தது தமக்குப் பரம திருப்தியாக இருந்ததென்றும், மீண்டும் தாம் தமிழ்ப் படத்தில் நடிக்க அழைக்கப்பட்டால் உத்ஸாகமாக ஏற்றுக்கொள்வார் என்றும் தெரிவித்தார்.

பிலிம் விசாரணைக் கமிட்டி

இந்திய சர்க்கார் நியமித்துள்ள பிலிம் விசாரணைக் கமிட்டியினர் தங்களது விசாரணையை பம்பாயில் சென்ற மாதம் 20-ம் தேதி துவக்கினார்கள். விசாரணையைத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடத்தினார்கள். சினிமாத் துறையில் சம்

"எட்ரம்"

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தை திரும்பப் பெறுவதற்கும் சிறந்த

ஹோமியோபதி கூட்டு ஔஷதம்

இதை ஆண், பெண் யாவரும், எவ் வயதினரும் உபயோகிக்கலாம்

50 மாத்திரைகள் கொண்ட புட்டி விலை ரூபாய் 4.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட், கும்பகோணம்.

பந்தப்பட்ட பலதரப்பட்ட கலைஞர்களை அவர்கள் விசாரித்தார்கள்.

ஸ்ரீ. பாபுராவ் பாய், பட நீளக் கட்டுப்பாடு பற்றிக் கூறினர். நீளக் கட்டுப்பாடு ஒன்றும் இருக்கக் கூடாது என்றும், அது படத் தயாரிப்பாளரின் யுக்தானுசாரத்திற்கு விடப்பட வேண்டுமென்றும் அவர் கூறினர். மேலும் அவர், நம் நாட்டில் படங்கள் காட்டப் போதுமான வசதி கிடையாது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில், டூரிங் கொட்டகைகள் கிராம பக்கங்களுக்கு சௌகரியமாக இருப்பதால் அவைகள் மீது குறைந்த படசக் கட்டுப்பாடுகளைத் தான் விதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ. ஜே. பி. திவாரி, படத் தயாரிப்பாளருக்கு ரூபாய்க்கு மூன்றணுவே கிடைக்கிறது என்றும், சர்க்காருக்கே வரி மூலம் அதிகமான பாகம் போகிறதென்றும் எடுத்துக் காட்டினர்.

சினிமா நடிக நடிகைகளுக்குப் போதுமான வசதி இல்லை என்றும், குரல் இரவல் கொடுக்கும் முறை தமக்குப் பிடிக்கவில்லை என்றும் நடிகை நளினி ஜயவந்தி தெரிவித்தார். அவர் நக்ஷத்திரங்களின் வருமானத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை வருமான வரி எடுத்துக் கொண்டு போகிறதென்றும், வரியைக் குறைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்

பிரபல சினிமா நடிகையான சோபனா சமரத்தும் விசாரிக்கப் பட்டார். அவர், நடிக, நடிகைகளின் கஷ்டங்களையெல்லாம் எடுத்துக் கூறி, நடிகர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு நிலையத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று யோசனை கூறினர்.

நடிகர் ராஜ் கபூர், படங்களில் நாட்டியமும், சங்கீதமும் மிகவும் முக்கியமென்று குறிப்பிட்டார். நடிகை சிநேகபிரபா, நடிகைகள் குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு வசதியாக ஸ்டுடியோவில் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தார். படம் பிடிக்கப்படும் முன்னர், நடிக, நடிகைகள் மணைக் கணக்கில் காத்து நிற்க வேண்டியிருக்கிறது என்று வருத்தம் தெரிவித்தார் தொழிலாளி-முதலாளிகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்க மத்யஸ்த கோர்ட் ஏற்படுத்துவதைத் தாம் ஆமோதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கித்வா என்பவர், சினிமா ஸ்டுடியோக்களையெல்லாம் ஒன்றாக இணைத்து, பிலிம் காலனிகளை நிர்மாணிக்க வேண்டும் என்று அபிப்பிராயம் வெளியிட்டார்.

டி.எஸ்.ஆர்.

கோகுல்

ஹேர் ஆயில்

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்.

சென்னை ஏஜண்டு: M/s சுராஜ் ஏஜன்ஸிஸ்
158, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை.
கோயமுத்தூர் & பாலக்காடு ஏஜண்டு:
B. பால பட்டாபி, கோயமுத்தூர்.



சென்ற மாதம் தென்னாடெங்கும் முன் பின் பார்த்திராத ஒரே பரபரப்பு. எங்கு திரும்பினாலும், குழந்தை முதல் வயோதிகர்வரை அனைவர் வாயிலும் ஒரே பேச்சுதான். அவர்களெல்லாம் இப்படி உத்ஸாகத்துடன் பேசி வந்தது, ''ஆனந்த விகடன்'', ''ஜெமினி'' ஸ்தாபனங்களின் அதிபரான ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனின் புத்திரி செள. லக்ஷ்மி நாராயணி—சிரஞ்சீவி வெங்கட சுப்ரமணியன் திருமணத்தைப் பற்றியதுதான். இத் திருமணம் சென்ற மாதம் 19-ந் தேதி சென்னையில் ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் சமீபத்தில் வாங்கிய ''ஜெமினி ஹௌஸ்'' மாளிகையில் (பழைய சிவகங்கா ஹவுஸ்) நடைபெற்றது.

கல்யாணத்தைப் பற்றிய செய்தி காட்டுத் தீ போல் பரவத் தொடங்கியது. சாதாரண ஏழ்மை நிலையிலிருந்து கால் நூற்றாண்டிற்குள் தம் சுய அறிவு, முயற்சி, இவற்றின் மூலம் கோடிஸ்வரரான— ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் தம் ஏகபுத்திரியின் திருமணத்தை ஏராளமான பணச் செலவில், நிகரற்ற முறையில் நடத்தி வைப்பார் என்று தமிழ் நாட்டினர் எதிர்பார்த்ததில் ஆச்சரியமே இல்லை. தொழில் சம்பந்தமான காரியங்களையே அவர் பிரமிக்கத்தக்க முறையில் செய்து காட்டியிருக்கும்போது, தம் சொந்த புத்திரியின் திருமண விஷயம் இதையெல்லாம் தோற்கடிக்கக் கூடியதாய் இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தது நியாயந்தானே?

பிரபல ''பாலு பிரதர்ஸ்''ல் தயாரித்து மணமக்களுக்கு அளிக்கப்பட்ட இப் படம் பரிசுகளுக்கு தலைமை வகித்தது.

கல்யாணம் சம்பந்தமான அழைப்புத் தாள் அச்சாவதற்கு முன்பே, அதைப் பார்க்க வேண்டுமென்ற துடிதுடிப்பு ஜனங்களிடையே ஏற்பட்டுவிட்டது. நூதன முறையில் தயாரிக்கப்பட்டிருந்த அழைப்புத் தாள்களை என்னிடமிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வாங்கிப் பார்த்து ஆனந்தம் அடைந்தனர். இதைப் பார்த்த பின், கல்யாண ஏற்பாடுகளைப்பற்றி கேட்பதற்காக அவர்கள் காதைத் தீட்டி வைத்துக் கொண்டிருந்தனர். அதற்கேற்றார்போல், சீர் வரிசைகள், சாமான்கள் சேகரிப்பு, கல்யாண விட்டில் ஏற்பாடுகள், வரவேற்பு முறை, சாப்பாடு, கச்சேரிகள், வைதிகர்களுக்கான வசதிகள், ''ஆ. வி.'' ஏஜண்டுகளுக்கு அழைப்பு, ஊழியர்களுக்குப் பரிசு, இவைகளைப் பற்றியெல்லாம் செய்திகள் வெளிக் கிளம்பலாயின. சென்னையில் நடந்த இந்த ஒரு கல்யாணத்தின் விளைவாக தென்னாட்டில் பல ஊர்களில் கருவேப்பிலை முதல் வைர நகைவரை சாமான்களின் விலைகள் ஏறிப்போனது குறிப்பிடத்தக்க விஷயம். ஸ்ரீ. வாஸன் மீது பொது ஜனங்களுக்கு உள்ள அபார அபிமானத்தினால், தம் காதில் விழுந்த செய்திகளை ஒன்றுக்குப் பதின்மடங்காய் பெருக்கிக் கூறி பெறுமைப்பட்டனர்.

முதல் வரிசை : 1. ஹிந்து ஸ்ரீநிவாஸனும், ஸ்ரீ. வாஸனும். 2. பாகவதரை வாஸன் வரவேற்கிறார்.

இரண்டாம் வரிசை : 1. சகஸ்ரநாமம், வ.ரா. 2. கண்ணாம்பா விஜயம். 3. ராஜகுமாரி, குசலாம்பாள், தமயந்தி, தனலக்ஷ்மி வருகின்றனர்.

மூன்றும் வரிசை : ஜெமினி மாஜி மானேஜர் ராமய்யரும், கிருஷ்ணாஜீயும். 2. ஊர்வலக் காட்சி, 3. எம். எஸ். சுப்புலக்ஷ்மி விஜயம்.

இடது புறம் : மணமக்களுடன் பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும்

வலது பக்கத்தில் : 1. நலங்கு. 2. புத்திரன பாலசுப்ரமண்யன். 3. பிரம்மோபதேசம் நடக்கிறது. 4. மணமக்கள் 'குஷி'யாக உள்ளனர்.



கல்யாணத்திற்கு முதல் நாளே பொது ஜனங்களின் உத்ஸாகம் எல்லை மீறிவிட்டது. ஜானுவாஸ ஊர்வலத்தின்போது மைலாப்பூரில் காணப்பட்ட ஜன ஸமுத்திரம் அறுபத்திமூவர் திருவிழாவையும் விஞ்சிவிட்டது.

கலியாணத்திற்காக, ஸ்ரீ. வாஸன் புகழக்கூடியபடி ஏற்பாடுகளைச் செய்திருந்தார். சாப்பாடு, ஓய்வு, கச்சேரி, இவைகளுக்கெல்லாம் தனித்தனியாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு இடம் அளிக்கக்கூடிய பிரம்மாண்டமான சிங்காரப் பந்தல்களைப் போடச் செய்திருந்தார். வந்தவர்களை உபசரிக்கும் விஷயத்தில் தம் ஊழியர்களுக்கு பல தினங்கள் ஒத்திகை அளித்து, தயாராய் வைத்திருந்தார். ஆனல் முன் ஜாக்கிரதையும், திறமையும் கூடிய இந்த ஏற்பாடுகளெல்லாம் 'ஸ்ரீமான் பொதுஜன'த்தின் உத்ஸாகத்தின் முன் தலைவணங்க வேண்டியதாகிவிட்டது. ஒரு "ஆனந்த விகடனை" வாங்குவதற்கோ, அல்லது ஒரு ஜெமினி படத்தைப் பார்ப்பதற்கோ நாலணா கொடுக்காதவர் தமிழ் நாட்டில் இருக்கவே முடியாது. இந்தக் காரணத்தினல், பொது ஜனங்களின் ஒவ்வொருவரும், "ஸ்ரீ. வாஸன் கோடீஸ்வரர் ஆனதில் தமக்கு ஒரு பங்கு உண்டு" என்றும், "இந்தக் கல்யாணத்திற்கு விஜயம் செய்யத் தமக்கு பூரண உரிமை உண்டு" என்றும் கருதத் தொடங்கி விட்டனர்! இந்த எல்லையற்ற அபிமானத்தை "ஜெமினி ஹவுஸி"ன் இரும்புக் கதவுகளும், குதிரைப் போலீஸாரும், ஸ்ரீ. வாஸனின் ஊழியர்களும் தடைப்படுத்தி விட முடியுமா என்ன? முகூர்த்த தினத்தன்று கதவுகளை சில்லோருக்கும் திறந்துவிட வேண்டியதாயிற்று. கண்காக்ஷிகளைப் போல் ஜனத்திரள் உள்ளே நுழைந்தது. ஸ்ரீ. வாஸன் தம் பெண்ணுக்கு அளித்த ஏராளமான சீர்வரிசைகளும், மணமக்களுக்கு அளிக்கப்பட்ட பரிசுகளும் இரண்டு பெரிய கண்ணாடி அறைகளில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தது, உண்மையில், கண்காட்சியாகவே விளங்கியது. உள்ளே பிரவேசித்த பொது ஜனங்கள் இவைகளையும், கல்யாணப் பந்தல்கள் ஏற்பாடுகள் முதலியவைகளையும் பார்த்து விட்டு, மணமக்களையும், ஸ்ரீ. வாஸனையும் மனதார வாழ்த்தியபடியே சென்றனர்.

ஐந்து நாட்கள் ராஜரீதியில் நடந்த இந்தக் கல்யாண வைபவத்தின் போது எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. கே. பட்டம்மாள், செம்மங்குடி சீனு, குமாரி கமலா, வைஜயந்திமாலா, லலிதா-பத்மினி-ராகினி, திருவாவடுதுறை ராஜரத்தினம், கூனிக்கரை பிச்சையப்பா, வேலூர் நியூ கர்னாட்டிக் பாண்டு கோஷ்டியினர் ஆகியோர் சங்கீத, நடன விருந்துகளை அளித்தனர். ஒவ்வொரு நாளும் கட்டுப்படுத்த முடியாத ஜனத்திரள். இதன் விளைவாக அழைப்புப் பெற்ற அநேகர் உள்ளே போக முடியாமல் போய்விட்டது. ஆனல் அவர்கள் கூட, நிலைமையை சரியாக உணர்ந்து கொண்டு, தமக்குத் தாமே சமாதானம் கூறிக் கொண்டு விட்டனர்.

ஏதோ ஒரு இடத்திற்கு ஒரு பிரபல சினிமா நக்ஷத்திரம் வருவதாயிருந்தாலே எப்படியோ அந்தச் செய்தி 'குசு குசு' வெனப் பரவி, ஆயிரக்கணக்கில் ரஸிகர்கள் கூடிவிடுவார்கள். ஸ்ரீ. வாஸன் வீட்டுக் கல்யாணத்திற்கோ சினிமா உலகமே திரண்டு வந்து விட்டது. பிரபல நக்ஷத்திரங்கள், உப நக்ஷத்திரங்கள், எக்ஸ்ட்ராக்கள், மற்றும் சினிமா பிரபலஸ்தர்கள் அத்தனைபேரும் விஜயம் செய்தனர். அதோடு அரசியல், பத்திரிகை, வியாபார, உத்தியோகத் துறைகளில் பிரபலமாயுள்ளவர்களும் வந்திருந்தனர். ஆனல் இவர்களையெல்லாம் அன்று பொது ஜனங்கள் பொருட்படுத்தாதது

சிறந்த தங்கம், வெள்ளி நகைகளுக்கு ஏற்ற இடம்,,

ஜெயின் ஜ்வல்லரி கம்பெனி
நெ. 1. நாகேஸ்வரராவ் ரோடு...
தியாகராய நகர்..
சென்னை 17.

டெலிபோன் : 88479

பெரிய ஆச்சரியமாகும் அன்று "மஹா நக்ஷத்திரமாக" விளங்கியவர் ஸ்ரீமான் வாஸன்தான். அவரைப் பார்ப்பதற்கே பொது ஜனங்கள் மிக முயன்றனர்.

இப்படியாக விகடர் வீட்டுக் கல்யாணம் இணையற்ற முறையில் நடந்தேறி சம்பந்தப் பட்டவர்கள், சம்பந்தப் படாதவர்கள் எல்லோருக்குமே குதூகலத்தை அளித்திருக்கிறது. ஆனால் இவர்களிடையே ஒரே ஒரு ஆத்மாவுக்கு மட்டும் இந்தக் கல்யாணம்மிகுந்த அதிருப்தியை உண்டுபண்ணியது என்றாலே ஆச்சரியப்படுவீர்கள். அப்படி அதிருப்தியடைந்தவர் நம் வாஸன்தான் என்றாலோ நம்புவீர்களா?

தாம் அழைத்திருந்த அநேகர் உள்ளே பிரவேசிக்க முடியாமலும், உள்ளே வந்தவர்களை திருப்திகரமாக உபசரிக்க முடியாதபடியும் சந்தர்ப்பங்கள்ஏற்பட்டு விட்டனவே என்ற விஷயம் ஸ்ரீ. வாஸனின் மனதை வாட்டி வந்தது. எனவே, அவர் கல்யாணம் முடிந்த பிறகு பத்துப் பதினைந்து நாளைக்கு, தாம் முன்பு அழைப்பு அனுப்பிய அனைவரையும், தினத்திற்கு சில நூறு பேர்களாக வரவழைத்து, தாமே நேரில் இருந்து உபசரித்து, எல்லோருக்கும் திருப்தி ஏற்படும்படிச் செய்தார்.

தமிழ் நாட்டில் எவ்வளவோ கோடீஸ்வரர் வீட்டுக் கல்யாணங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் அதிலெல்லாம் இது மாதிரியான உத்ஸாகத்துடன் பொது ஜனங்கள் கலந்து கொண்டதுமில்லை; இவ்வளவு அதிகமாக அவைகளைப்பற்றி பேசியதுமில்லை; பெருமைப் பட்டதுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

—பி. ஆர். எஸ்.

பார்வதி-கைலாஸம் திருமணம்

பார்வதி - கைலாஸம்

தற்காலம் விளம்பரத்தின் மகிமையை விளம்பரம் செய்பவர்களும், பொது மக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் 30 வருஷங்களுக்குமுன் இருந்த நிலைமை முற்றிலும் வேறு. அந்தக் காலத்திலேயே விளம்பரம் தொழிலில் ஈடுபட்டு, விளம்பரம் செய்பவர்களைத் தூண்டித் தூண்டித் தற்போதைய நிலைமையை ஏற்படுத்தி வைத்தவர்களுள் ஸ்ரீ. பி. சேஷாசலம் ஐயரும் ஒருவர். அவர் "சுதேச மித்திரன்" பத்திரிகையில் விளம்பர மானேஜரானதும், எல்லோரும் 'பி. எஸ். ஐயர்' என்று சுருக்கமாகவும், அன்புடனும் அவரை அழைக்க ஆரம்பித்தனர். பிறகு சுமார் பனிரண்டு வருஷ காலத்திற்கு முன் அவர் சொந்தத்திலேயே "பி. எஸ். மணி அண்ட் கம்பெனி" என்ற விளம்பர ஸ்தர் பனத்தைஆரம்பித்தார். இந்த ஸ்தாபனம் பத்திரிகைகளுக்கும் விளம்பரக்காரர்களுக்கும் பேருதவியாக இருந்து வருகிறது. அதோடுகூட ஸ்ரீ. ஐயர் சொந்த ஹோதாவிலும் எல்லோருக்கும் தம்மாலியன்ற உதவிகளை தாராளமாகச் செய்து வருகிறார். அதனால் அவர் எல்லோரது அன்பையும் பெற்றிருக்கிறார்.

இத்தகைய ஒரு நல்ல மனிதர் தம் பெண்ணுக்கு விவாஹம் செய்கிறார் என்றால் ஊரே திரண்டு வந்ததில் ஆச்சரியமென்ன? அவர் தியாகராய நகரில் புதிதாய் வாங்கியுள்ள பங்களாவில் செள. பார்வதிக்கும், சிர. ஏ. என். கைலாஸத்திற்கும் சென்ற 4-ந் தேதியன்று திருமணம் தடபுடலாய் நடந்தேறியது. அன்று மாலை செம்மங்குடியின் கச்சேரியும் இரவு திருவெண்காடு சுப்ரமண்ய பிள்ளையின் நாதஸ்வரத்துடன் ஊர்வலமும் விமரிசையாய் நடந்தேறின. மணமக்களுக்கு ஏராளமானபேர்கள் பரிசுகளை வழங்கியிருக்கின்றனர்.

* * *

ஜெமினி ஸ்டுடியோவில் வேலை பார்த்து வரும் ஸ்ரீ. ஜி. கே. சேஷகிரி தம் ஒருகுமாரத்தியான, செள. லலிதா லக்ஷ்மியை, ஸ்ரீ. வெங்கட்ராமனுக்கும், மற்றொரு குமாரத்தியான செள. பால சரஸ்வதியை ஸ்ரீ. ஸ்ரீனிவாஸனுக்கும் இம்மாதம் சீர்காழியில் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

மணமக்களுக்கு நம் ஆசி உரித்தாகும்.

பிராயச்சித்தம்

[50-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் மூன்று மாதங்கள் ஓடின.

''வாஸவதத்தா'' அமோக வரவேற்புடன் எங்கு கண்டாலும் உலவிக்கொண்டிருந்தாள்.

பூர்ணாவின் புகழ் சினிமா உலகை உலுப்பி எடுத்தது! பூர்ணாவைத் தேடித் திரிந்துகொண்டு படமுதலாளிகள் திண்டாடினார்கள்.

அவளை எங்கேயும் காணமுடியவில்லை அவர்களால்.

'' பூர்ணா ''

'' என்ன ?''

''இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த அக்ஞாதத்தில் ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறாய் ?''

'' ஏன் ?''

'' என்ன 'ஏன்' என்கிறாய். இந்தச் சிறை வாசத்திற்கு ஓய்வு என்று பேரோ ?''

''என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் ?''

'' ஒன்றும் செய்யவேண்டாம். தேடி …ருபவர்களுக்கு என்னால் இனி ஜவாப் …சால்லமுடியாது. ஆமாம்!''

ஒரு நிமிஷம் பொறுத்து சாவதானமா…க, ''கவலைப்படாதீர்கள். நாளைமுதல் …ங்கள் அந்த சள்ளைப்படவேண்டி வராது. கீழேபோய் கொஞ்சம் காப்பி அனுப்புகிறீர்களா—சூடாக...''

'' உபரி என்ன வேண்டும் ?''

'' உபரி வேண்டாம். காப்பி மட்டும்—சூடாக இருக்கட்டும்.''

'' நல்ல காப்பி, நல்ல சூடு!'' என்றுகொண்டே திரும்பினாள் கேவியாக.

ஐந்து நிமிஷத்தில் காப்பி வந்தது. அதைவாங்கிக்கொண்டுஉள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள் பூர்ணா.

கொதிக்கக் கொதிக்ங சொட்டுச் சொட்டாக டம்ளர் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள்.

எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினாள். சரி. மூளை ஒரு தீர்மானத்திற்கு ஒத்து வந்து விட்டது! ''காசும், பணமும், உணவும், படுக்கையும் பார்த்தாகி விட்டது. நீரில் கிடந்த சோற்றை அரித்தும் தின்றாயிற்று—நெய்யும், பாலும், உண்டாயிற்று, போக போக்யங்களை மென்று விழுங்கி துப்பியும் ஆயிற்று!

''இந்த நிமிஷம் எனக்கு எதன்மேலும் பற்றுதலில்லை. என் எதிர்கால ஸ்மரணையில் தெய்வாம்சமாக விளங்கி என்னை ஆற்றுபவள் கற்பகம் என்ற ஒருத்திதான்.

''குமார், மூன்று மாதமாகப் பிரயத்தனம் செய்து கன்னெஞ்சுடன் உங்கள் மீது வைத்த பிரேமையை எனது ஆசைகளை — இன்பக் கோரிக்கைகளை — தகர்த்து எறிந்து விட்டேன்.

''கற்பகம், உத்தம ஸ்திரீ. எனது மதிமயக்கத்தால், நான் பட்ட ஆவிக் கொதிப்பையே உனக்கும் உண்டாக்கி விட்டேன். இனி அந்தத் தவறைச் செய்யக் கூடாது என்ற உறுதிக்கு வந்து விட்டேன். எப்பொழுது அந்த பிரதிக்ஞை செய்து விட்டேனோ அப்பொழுது இந்த வீட்டில் நானிருப்பது கூடாது. என் காதல் தேவனை......சை, துர் எண்ணம்!...குமார் ......என்...இனிய ... . என் மனதை, சை. என்ன துஷ்ட எண்ணம். நான் நிமிர்ந்து பாராதிருந்தால்...இத்தனை காலமும் இருந்தது போல...? கொடுத்து வைத்தால்தானே..? சரி...... இனி அதைப் பற்றிப் புலம்பி என்ன லாபம்! ஏதோ, காதல், உண்மை அன்பு......இவற்றின் மாய ஜாலங்களில் மனதைப் பறிகொடுத்தேன்... பூமிதேவி போன்ற கற்பகத்தின் வாழ்வில் இருளைத் தோற்றுவித்தேன்...நல்லவேளை...இப்போதாவது உணர்ந்து கொண்டேனே, அது போதுர்!'' என்று இவ்வாறாக மனதை திருப்திப்படுத்திக் கொண்டு படுக்கையில் சாய்ந்தாள்.

* * *

பூர்ணா மதுரை சென்று வருவதாகப் போய் ஒரு வாரமாகி விட்டது; இன்னும் வரக் காணோமே. கடிதமாவது வருமோ' என்ற நினைவில் வாசலில்நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் கற்பகப்.

கடிதம் வந்து விட்டது.

அதைக் கொண்டுவந்து குமாரிடம் கொடுத்தாள் கற்பகம். பிரித்துப் படித்தாள். கையில் கடிதத்தை வைத்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதைக் கண்ட கற்பகம், ''என்ன எழுதியிருக்காள்?'' என்று தாபத்தோடு கேட்டாள்:

''குமார், தங்கள் கடிதம் கிடைத்தது. தங்கள் உத்திரவுப்படி உடனே வரமுடியாததற்கு வருத்தப்படுகிறேன்.

''நர்ன் மற்றும் சில செய்திகளைத் தருகிறேன். பூர்ணா தனது சொத்து, சுதந்திரம் யாவையும் எனது அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட கற்பகத்திற்குக் காணிக்கையாக செலுத்திவிட்டாள்.

'' இனி அவளுக்கு பந்தமில்லை, பாசமில்லை. உலகில் இனி ஒன்றுமே இல்லை! உடம்பில் தெம்பு உள்ளவரை க்ஷேத்திராடனம் செய்து, நினைவுள்ளவரை நடமாடி, என்றாே ஒருநாள் உடம்பு விழுந்துவிடப்போகிறது. அதைப்பற்றி இனிக் கவலையில்லை.

''கற்பகம்! நல்ல குலத்தில்பிறந்தேன். கல்யாணம் செய்துகொண்டேன்; வாழ்ந்தேன். கணவனை நாடகக் கலைக்கு நான் தாரை வார்த்ததும்—பிறகு நிகழ்ந்ததும் யாவும் உனக்குச் சொல்லியிருக்கிறேன்! பங்களா, மோட்டார், கூர்க்கா, அஷ்ட ஐஸ்வரியம் எல்லாம் அனுபவித்து விட்டேன். இனி அவைகளை யெல்லாம் உனக்கு மனமார அர்ப்பணம் செய்வதை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள். கற்பகம், நன்றாக இரு! நான் செய்த பாபத்திற்கு நிவாரணம் தேட வந்து விட்டேன்.

''குமாருக்கு எனது நமஸ்காரம்.

பூர்ணா''

'' ஐயையோ, அவளை என்ன சொன்னீர்கள்? என்ன விபரீதமிது?''

'' நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்த மாதிரி அவள் ஏதாவது செய்வாள் என்பது மாத்திரம் அவள் உன் கடிதத்தைப் பார்த்ததிலிருந்தே...''

'' எந்தக் கடிதம்?''

'' அதுதான் சொல்லல்லியா நான்!? கிழித்துப் போட்ட துண்டுகளை......''

'' ஓ, அதுவா! சரி, அது கிடக்கு, காரை எடுத்துண்டு ஓடுங்கோ! முன்னாடி... அவள் இல்லாதே...''

'' அவள் நான் போகிற மட்டில் அங்கே உட்கார்ந்திருப்பாளோ...! அவ்வளவுதான்..''

கற்பகத்திற்கு ரௌத்திராகாரமாகக் கோபம் வந்தது. கண்களை உருட்டி விழித்து,'' அவ்வளவு தானா? அவளைப் பரதேசியாக்கித் துரத்திவிட்டு, நாம் சொத்தை யெல்லாம் அனுபவிப்பதா... ஆனந்தமாக?

''ஆமாம், பெண் மனம் பெண்ணுக்குத் தானே தெரியும்? நீங்கள் என்ன கண்டீர்கள்? அவள்.... போய்விட்டாளா. சரி, இதை யெல்லாம் தான தர்மம் செய்யுங்கள்... நம்முடைய செல்வம் நமக்குப் போதும்'' என்றாள்.

குமார் அப்போது பொறி கலங்கி உணர்விழந்து சோர்ந்திருந்தான். கற்பகம் கண்ணீரை வடித்துக்கொண்டு பதுமையாக நின்றாள்.

வாசலில்,

''அம்மா, தாயே, ஏழைக்கு ஒரு வாய் அன்னம் கொடு, தாயே'' என்ற குரல் கேட்டு திடுக்கிட்டாள் கற்பகம்.

'' பிச்சை கொடு '' என்றான் குமார்.

பூர்ணாவின் தியாகம் ஏழைகளுக்குப் பயன் தந்தது!

இயற்கை நடிப்பு

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

அவள் சொல்லிலும் செய்கையிலும் பதட்டம் மிகுந்திருந்தது.

'' பின்னே எது?'' என்று கேட்டுவிட்டு, ''இடி இடி'' யென்று சிரித்தார் டைரெக்டர்.

அவர் சிரிப்பு, கமலகுமாரியை திகைக்க வைத்தது. படப் பிடிப்பாளரிலிருந்து, ஸ்டுடியோ சிப்பந்திகள் அனைவரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

''கமலா......உன் தாயார் இறக்கவுமில்லை......ஒண்ணும் இல்லை......!'' என்றார், சிரித்து ஓய்ந்த டைரெக்டர்.

''ஹா! எங்கம்மா இறக்கல்லியா?...... பின்னே அந்த தந்தி......?'' மேலே ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்து நின்றாள் அவள்.

''நான்தான் உங்க அம்மா இறந்துவிட்டதாகத் தந்தி கொடுக்கிறதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்தேன்...உன் சோக நடிப்பு சோபிக்கணும் பார்!...... அதற்காகத்தான்!...இப்போ பார்த்தாயா உன் நடிப்பை...? 'ட்ரெமெண்டஸ்'...'' என்றார் டைரெக்டர்.

''நல்ல யோசனை!......பிரமாதம்......!'' என்று டைரெக்டருடன் சேர்ந்து வார்த்தைகளைக் கொட்டினார் வசனகர்த்தா.

கமல குமாரி ஆச்சர்யத்தால் சிலையாகி விட்டாள்.

''நான் அந்த மாதிரி தந்தி கொடுக்கல்லேன்னா நீ இவ்வளவு பிரமாதமா நடித்திருக்க முடியுமா?'' என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரிக்கலானார் டைரெக்டர்.

''இந்த மாதிரித் தந்தி கொடுத்து, துயர உணர்ச்சிகளைத் தூண்டி விட்டதும் அபாரம்... இப்பொழுது எடுத்த சோக கட்டத்தில் ஸ்ரீமதி கமல குமாரியின் நடிப்பும் அபாரம்...!'' என்றார் வசன கர்த்தா இலக்கண சுத்தத்துடன்.

ஆச்சர்யத்தால் சிலையாகி நின்ற கமல குமாரியின் முன், ஸ்டுடியோ கேன்டின் பையன் சூடான காப்பியை நீட்டினான்.

குமாரி மாலதியின் பரதநாட்டியக் கச்சேரி சென்னை வி. பி. ஹாலில் சென்ற மாதம் நடைபெற்றது.

மணமகள்

சென்ற மாதம் 31ம் தேதி நியூடோன் ஸ்டுடியோவில் ஒரு பகுதியில் சாஸ்திரோக்தமான பூஜை நடைபெற்றது. என்னெஸ்கே பிலிம்ஸ் ''மணமகள்'' படத்திற்கான ஆரம்ப பூஜை விழா அது என்று அறிந்தபோது ஒரே ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? கிருஷ்ண விக்ரஹத்திற்கு பூஜை நடத்தி, புளி மூட்டை கற்பூர ஆரத்தி எடுக்க, விழா ஆரம்பமாயிற்று. விழாவுக்குப் பல பத்திரிகாசிரியர்களும், எஸ். எஸ் வாஸன் போன்ற பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். விழாவுக்கு விஜயம் செய்திருந்த முக்கியமான பிரமுகர்களுக்கெல்லாம் கிருஷ்ணன் மாலை சூட்டினார். பிறகு படத்தில் யார் யார் நடிப்பார்கள் என்பதை அறிவித்தார். மலையாளக்கதையைத் தழுவிய ''மணமகள்'' கதை வசனப் பொறுப்பை ஏ. ஏ. சோமயாஜுலுவிடமும், பாடல்கள் சந்தான கிருஷ்ண நாயுடுவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விழாவுக்குத் தலைமை வகித்து, காமிராவை ஓடவைத்தார் எழுத்தாளர் ஸ்ரீ. வ. ரா.

ஹாஸ்யக் கலைச் செல்வன்

ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன் இனி வெறும் டி. ஆர். ராமச்சந்திரன் இல்லை. ''ஹாஸ்யக் கலைச் செல்வன் டி. ஆர். ராமச்சந்திரன்'' ஆகிவிட்டார். காரைக்கால் கதம்ப நிலையத்தினர் இம்மாதம் 11-ம் தேதி ஜோதி டாக்கீஸில் இப்பட்டத்தை அவருக்கு அளித்தார்கள். ஒரு பெரிய வெள்ளி மாம்பழத்தில் இப்பட்டத்தைப் பொறித்து அளித்தார்கள் குமாரி கமலாவின் பரத நாட்டியமும், விகடமணி ஆர். கே. மூர்த்தியின் விகடக் கச்சேரியும் நடைபெற்றன. சின்ன அண்ணாமலை தலைமை வகித்தார்.

சுகந்தா

தபால்காரர்கள புஸ்தக சாலைக்கும், இரவுப் பள்ளிக்கூடத்திற்கும் நிதி திரட்டுவதற்காக சென்னை தபால்காரர்கள் சங்கத்தினர் 'சுகந்தா' என்ற நாடகத்தை இம்மாதம் 11-ம் தேதி சௌந்தரிய மஹாலில் நடித்தார்கள்.

வாழ்த்துகிறோம்

மதுரையிலுள்ள பிரபல நகை வியாபாரியான ஸ்ரீ. ஏ. வைரவன் செட்டியார் சென்ற மாதம் 19-ம் தேதி தமது மகள் சௌ. சீதாலக்ஷ்மியை, ஸ்ரீ. கே. டி. காளை பி. ஏ., க்குத் திருமணம் செய்து கொடுத்தார் மதுரையில்.

நமது சைத்ரீகர் (''முரளி'' என்ற புனைபெயர் கொண்ட) ஸ்ரீ. பி. எல். கிருஷ்ணமூர்த்தி சௌ. ஹேமாவதியை சென்ற மாதம் 22-ம் தேதி தமது வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார் வேலூரில்.

பிரபல நட்டுவனரான வழுவூர், ராமையாப் பிள்ளையின் மகளான சௌ. ஜெயலக்ஷ்மியை, ஸ்ரீ. ராமமூர்த்தி பி. ஏ., தமது மனைவியாகப் பெற்றார். சென்ற மாதம் 26-ம் தேதி இந்தத் திருமணம் கும்பகோணத்தில் நடைபெற்றது. வதூவரர் கிரஹப்ரவேசமும் வரவேற்பும் இம்மாதம் 2-ம்தேதி சென்னையில் நடைபெற்றன

சேலம் ரத்னா ஸ்டுடியோவின் பாகஸ்தரான ஸ்ரீ. ஏ. வி. காளியா பிள்ளை தம் புத்திரன் ஸ்ரீ. எஸ். எம். தியாகராஜனின் திருமணத்தை சேலத்தில் சென்ற மாதம் 31-ம் தேதி நடத்தினர். மணமகள் சௌ. விஜயலக்ஷ்மி, ஸ்ரீனிவாஸ அண்டு கம்பெனி, ஸ்ரீனிவாஸ் டாக்கீஸ் இவைகளின் முதலாளியான, ஸ்ரீ. வி. டி. வீரராகவ பிள்ளையின் புத்திரியாவர்.

சினிமா நடிகர் டி. இ. கிருஷ்ணமாச்சாரியார், இம்மாதம் 9-ம் தேதி தமது புத்திரி சௌ. இந்திராவை, சிரஞ்சீவி வி. எஸ். ராகவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்ததுடன், தம் புத்திரன் டி. இ. ராஜா ராகவனுக்கு பிரம்மோபதேசமும் செய்து வைத்தார்.

134125

அச்சை அழகுபடுத்துவது
அருமையான பிளாக்குகளே !

★

அவைகளை நேர்த்தியான முறையில், நீண்ட
நாள் உழைக்கக் கூடியபடி தயாரிப்பதில்
பிரசித்தி பெற்றவர்கள்

★

மூவர்ண, இருவர்ண, பிளாக்குகள்,
லைன், ஆப்டோன் முதலிய எந்தவித
மான பிளாக்குகளையும் துரிதமாய்
தயாரித்துக் கொடுக்கிறோம்.

★

விவரங்களுக்கு :

கமர்ஷியல் பிரிண்டிங் அன்
பப்ளிஷிங் ஹவுஸ்

போன் : 4037

46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை 1.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House. 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316

ஜூன் 24ந் தேதியன்று தமிழ் நாடெங்கும் வெளிவருகிறது

சென்னை-பாரகன், பிராட்வே ஆகிய இரு தியேட்டர்களில்